
# முற்றத்திற்கு வாருங்கள்



— கவிதைத் தொகுதி —

இக்பால் அலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர் இலங்கையனுக்கு
அன்புடன்
[illegible]
5/08/97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றத்திற்கு வாருங்கள்

கவிதைத் தொகுதி

இக்பால் அலி

வெளியீடு
மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்
18/13 பூரணவத்தை, கண்டி
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றத்திற்கு வாருங்கள்

(கவிதைத் தொகுதி)


| | |
|---|---|
| முதற்பதிப்பு | 1996 |
| ஆசிரியர் | **இக்பால் அலி**<br>445, பேராதனை வீதி,<br>கண்டி இலங்கை. |
| வெளியீடு | மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்<br>18/13 பூரணவத்தை<br>கண்டி, இலங்கை |
| உரிமை | ஆசிரியருக்கே |
| அச்சுப்புதிவு | பிலால் டிசைனர்ஸ்<br>197, தெற்கு மாரட் வீதி,<br>மதுரை-625 001. தமிழ் நாடு. |
| அட்டைப்படம் | ஓவியர் வி.எம்.எஸ். குணம் |
| இலங்கை விலை | ரூ 60.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்த்த

பேராசிரியர் அல்லாமா உவைஸ்

அவர்களுக்கும்

ஈழத்து முற்போக்கு இலக்கியத்திற்கு வளம் சேர்த்த

எஸ். அகஸ்தியர்

அவர்களுக்கும்

இந்நூல் காணிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இக்பால் அலி
இளைமையும்,
எழுச்சியும்,
எதையும் திறம்பட
செய்ய வேண்டும் என்றத்
துடிப்பும்.
சாதாரண மக்களை
நேசிக்கின்றத் தன்மையும்
இவரை கோடிட்டி
காட்டியது.
இந்த மனித நேயம் கொண்ட
மனிதனை
இனங் கண்டுக் கொண்டதனால்தான்
மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்
தன்னோடு இவரை
அனைத்துக் கொண்டது.
இவரது கவிதை வீச்சும்,
கவித்துவமும்,
மானுடம் தளைக்க
எழுந்த கவிவரிகளும் தான்
'முற்றத்திற்கு வாருங்கள்' என்ற
இவரது கவிதைத் தொகுதியை
வெளியிட வேண்டும்
என்றுத்துணிந்து
இந்த களத்தில்
கால் பதித்தோம்.
எங்களின் புதிய
பயணத்தில்
வாசகர்களும்
கை கோர்த்து
ஆதரவு வழங்குமாறு
நேசக் கரம் நீட்டுகின்றோம்.
மேலும்,
நல்ல படைப்புக்களை
வெளிக் கொணர
ஏதுவாக அமையும்.
இக்பால் அலியின்
மேலும் பல
படைப்புக்கள்
வெளிவர வேண்டும்
என
வாழ்த்துகின்றேன்

இரா.அ.இராமன்
தலைவர்,
மக்கள் கலை இலக்கிய
ஒன்றியம்
18/13, பூரணவத்தை,
கண்டி,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராதனை பல்கலைக்கழக அரசறிவியல் பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா அவர்கள் வழங்கிய ஆசியுரை

கவிதை என்பது உள்ளத்து உணர்வுகளின் மென்மையான வெளிப்பாடு என்பதோடு அது மிகப் பழமை வாய்ந்த் இலக்கிய வடிவமுமாகும். கவிதை என்பது பல கூறுகளினால் ஆகிய கூட்டுப் பொருள். சொல், பொருள், ஓசை, அலங்காரம் சொல்லுக்கு அப்பால் குறிப்பாக நிற்கும் உணர்வு ஆகிய பல அம்சங்கள் அதனுள் அலங்கியுள்ளன. இத்தகைய பல உறுப்புகள் அளவாகக் கலந்து பிரிக்க முடியாவண்ணம் இயைந்து இருப்பதுதான் கவிதை.

அண்மைக் காலத்தில் புதுக்கவிதை என்ற வடிவம் பிரபல்யம் அடைந்து வருகின்றது. யாப்பமைதி, ஓசைநயம், சொல்வளம் இவற்றிலே புதுக்கவிதை மரபுவழிக் கவிதையிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது. இது படிமம், குறியீடு, பேச்சோசை, பேச்சு வழக்கு, மண்வாசனை என்பவற்றை முக்கியத்துவப்படுத்துகிறது.

கண்டியில் பத்திரிகையாளராகக் கடமையாற்றும் ஜனாப் இக்பால் அலி அவர்கள் மேற்சொன்ன புதுக்கவிதை வடிவத்தைப் பயன்படுத்தித் தனது உள்ளத்து உணர்வுகளை தான் அன்றாட வாழ்க்கையில் கண்டவற்றையும்-நிகழ்ந்துவரும் சமூக, அரசியல் மாற்றங்களையும், குறிப்பாக தான் வாழும் மலையக மக்களது விசேடமாக பெருந்தோட்டத் தொழிலாளர்காது அவலங்களை, ஏமாற்றங்களை புதுக்கவிதைகளாக வடித்துத் தந்துள்ளார்.

இவரது கவிதைகளில் நாம் காணும் . சிறப்பம்சம் பேச்சோசையாகும். தான் சொல்ல வருகின்ற மண உணர்ச்சிகளை வார்த்தைகளில் வடிப்பதில் வெற்றிகண்டுள்ளதோடு பல்வேறு விடயங்கள் பற்றியும் கவிதை பாடியுள்ளார். இவர் இத்தகைய மேலும் பல கவிதைகளை பாடி எமது சமூகம் முன்னேற வழியமைக்க வேண்டுமென்று வாழ்த்துவதோடு, இக்கவிதைத் தொகுதி நூலாக வரும்போது வாசகர்கள் அதனை வரவேற்பார்கள் என்றும் வாழ்த்துகின்றேன்.

அன்புடன், **அம்பலவாணர் சிவராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பத்திரிகையாளராகவும், கவிஞராவும் விளங்கும் இளைஞர் இக்பால் அலி எழுத்தையே தனது உயிர் மூச்சாகக் கொண்டவர். எழுத்து ஒரு வலிமையான சாதனம் என்பதை நன்கு உணர்ந்து செயற்படுபவர். 1987 முதல் பல்வேறு பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் அவரின் புதுக் கவிதைகள் வெளிவந்துள்ளன. அமைதியும், ஆர்வமும் கொண்ட அவர் எழுத்துத் துறையில் சாதனை படைக்க வேண்டுமென்ற ஆர்வம் கொண்டவர்.

இக்பால் அலியின் கவிதைகளின் முழுப் பலமும் அவை சமூக உணர்வோடு படைக்கப்பட்டிருப்பதாகும். பாரதி எழுதிய,

" ஆடுதல் பாடுதல் சித்திரம் - கவி
ஆதி யினைய கலைகளில்
ஈடுபட் டென்றும் உழைப்பவர் - பிறர்
ஈன நிலைகண்டு துள்ளுவார் "

என்ற பாடல் வரிகள் இவருக்கும் பொருந்தும். எழுத்துத் துறையில் ஈடுபட்டிருக்கும் இவரும் பிறரின் ஈன நிலை கண்டு துள்ளுபவராகவே விளங்குகின்றார். ஒரு மனிதனிடத்து இருக்க வேண்டிய மனிதாபிமானமும், ஒரு கவிஞனிடத்து விளங்க வேண்டிய சமூக அநீதிகளைக்கண்டு கொதிக்கும் உள்ளமும் அவரிடத்து இணைந்துள்ளன.

இக்பால் அலியிடம் காணப்படும் இன்னொரு சிறப்பு, இன, மத எல்லைகளைக் கடந்த அவரது விசாலித்த பார்வையாகும். மனிதனை தமிழனாகவோ, முஸ்லிமாகவோ, சிங்களவர்களாகவோ, ஐரோப்பியர்களாகவோ, ஆபிரிக்கர்களாகவோ, சீனர்களாகவோ கானமுயலாமல் மனிதனாவே பார்க்கும் அவரது தெளிந்த பார்வை அவரின் கவிதைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரூட்டுகிறது. மனிதனின் மேன்மை அவருக்கு களிப்பூட்டுகின்றது. அவனின் தாழ்வு அவரை வேதனைப்படுத்துகின்றது. அதனால் இயல்பாகவே அவரது கவிதைகள் முற்போக்குத்தளத்தில் உலாவுகின்றது.

கவிஞர் மலையகத்தில் வாழ்ந்துகொண்டிருப்பதால் இயல்பாகவே மலையகம் பற்றிய அக்கறை அவருக்கு இருக்கின்றது. மலையகம் பற்றி "பாஷனுக்காக" ஏதாவது பாடாமல் உண்மையான உள்ளத்தூண்டுதலோடு மலையகத்தை தனது புதுக்கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். மலையகப் பெருந்தோட்டங்களில் பாடுபட்டு உழைக்கும் தொழிலாளர்களை நன்கு பரிந்து வைத்துள்ளார். அவர்களது வேதனைகள் இவரது உள்ளத்தையும் வேகவைத்துள்ளன. அதன் பிரதிபலிப்பை இவரது பல்வேறு கவிதைகளிற் காண முடிகின்றது. எடுத்துக்காட்டாக,

" ஓ .......
மலையக மக்களே,
மாடான உழைப்பின்
மனவருத்தத்தை
உங்களைத் தவிர
வேறு யார்தான் அறிவாரோ? "

என்ற அடிகள் (மனவருத்தம்) இதனை உணர்த்துகின்றன. தாழ்வுற்று வறுமை மிஞ்சிய நிலையில் வாழும் ஏழைத் தோட்டத் தொழிலாளர் என்றுதான் உயர்வு பெறுவார்களோ.

கவிஞர் இக்பால் அலி இளைய தலைமுறைக்காகவும் குரல் கொடுக்கும் கவிஞராக விளங்குகின்றார். நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக நிலைப் பிரச்சினைகள், தனிமனித முரண்பாடுகள் போன்ற பல்வேறு அம்சங்கள் இளைஞர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி வந்துள்ளன. இதற்குப் பரிகாரம் காணும் முயற்சிகளில் நாட்டின் அரசியல்வாதிகளோ, சமூகத் தொண்டர்களோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நிபுணர்களோ, சட்ட மேதைகளோ இல்லை. இந்நிலையில் இளைஞர்களின் நிச்சயமற்ற எதிர்காலமே எங்கு நோக்கினும் தெரிகின்றது. இத்தகைய நிலையினை கவிஞர் தமக்கே உரித்தான பாணியில் பின்வரும் அடிகளில் (விடை கேடும் வினாக்கள்) குறிப்பிடுகின்றார்.

"எந்தப் பக்கம்
கால் அடியை
எடுத்து வைத்தாலும்
அந்தப் பக்கம்
எங்களுக்காகப்
படுகுழி தோண்டி
வைக்கப்பட்டே இருக்கும்"

இளைய தலைமுறை பற்றிச் சிந்திக்கும் கவிஞரின் பொறுப்புணர்வு குறிப்பிடத்தக்கது.

இக்பால் அலி தமது கவிதைகளினூடாக நாட்டின் அரசியல் நிலையையும், பல்வேறு சந்தர்ப்பங்களில் கிண்டல் செய்கின்றார். அரசியலில் அறிவில்லாதவர்களும், நேர்மை அற்றவர்களும், பொறுப்பில்லாதவர்களும், நாடு பற்றிய அக்கறை இல்லாதவர்களும் கணிசமான அளவுக்குப் பங்கேற்றுவரும் துர்ப்பாக்கிய நிலையை வேதனை உணர்வோடு கவிஞர் கிண்டல் செய்துள்ளார்.

"இன்று
எங்கு பார்த்தாலும்
நாக்குப் பலமும்
ஆயுத பலமும்தான்
போட்டி போடுகின்றன."

என்றும்,

"புல்லாங்குழலை
அடுப்பூதுகின்றவர்களிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தால்
அதன் தாற்பரியங்களை
அறியாதவராய்
அடுப்பைத்தான்
ஊதவரும்."

எனவும் அவர் எழுதிச் செல்லும்போது (இந்த நாள் நல்ல நாள்) அரசியல்வாதிகள் பற்றிய அவரது பொதுவான அபிப்பிராயம் புலப்படுகின்றது.

அதேவேளை மக்களின் பொறுப்பற்ற நிலை பற்றியும் கவிஞர் ஏக்கமும், ஏமாற்றமும் தொனிக்கும் வார்த்தைகளிலேயே எடுத்துரைக்கின்றார்.

"நெஞ்சு பொறுக்குதில்லையோ - இந்த நிலைகெட்ட மனிதனை நினைந்து விட்டால் என்ற பாரதியின் கருத்தே, மக்கள் தொடர்பாக இக்பால் அலியின் கருத்துமாகும்.

"நின்றால்
நிற்பதுதான்
இருந்தால்
இருப்பதுதான்
என்ற வியாதி
நமக்கு இருக்குமட்டும்
நம்விதி
அவ்வழியேதான்."

என்று கவிஞர் கூறும்போது (சிந்தனைக்குத்தானா முதலிடம்) மக்களின் பொறுப்பற்ற நிலைபற்றிக் கவலை கொள்வதைக் காண முடிகின்றது.

நாட்டில் சமாதான, சமதர்ம வாழ்வு ஏற்பட வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டவராக கவிஞர் விளங்குகிறார். அமைதியின் அழைப்பு போன்ற கவிதைகள் இவ்வகையில் அமைந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்பால் அலியின் கவிதைகளில் பொதுவாக மலையகம், இளைஞர் பிரச்சினைகள், அரசியல் நிலை, மக்களின் பல்வேறு பாதிப்புக்கள், சமாதான வேட்கை போன்ற அம்சங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இவ்வம்சங்கள் தனித்தனி கவிதைகளாகவும் வடிக்கப்பட்ள்ளன. அதேவேளை அவரது பல கவிதைகளில் பொது அம்சங்களாகவும் அவை விளங்குகின்றன.

இக்பால் அலி எதிர்காலத்தில் ஆற்றல் வாய்ந்த கவிஞராக துலங்குவற்கு வாய்ப்புகள் நிறைய உள்ளன. அதேவேளை, புதுக்கவிதைகள் எனக் கூறப்படுபவை பலவற்றில் காணப்படும் சில குறைகளும் இவரின் கவிதைகளில் காணப்படுகின்றன. புதுக்கவிதைகள் பலவற்றில் வசனங்கள் முறித்துப் போடப்படுவதைக் காண்கின்றோம். இக்பால் அலியின் கவிதைகள் சிலவற்றிலும் இக்குறை காணப்படுகின்றது. பொதுவாக புதுக்கவிதைகளை தொடர்பாகக் கூறப்படும் குறைகளுள் ஒன்று, சிலரின் கவிதைகள் தெளிவின்றி வாசகருக்கு குழப்பத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருப்பதாகும். இத்தகைய குறைகளை நீக்கி எதிர்காலத்தில் மேலும் கலைச் செழுமை மிக்கனவாக அவர் தமது கவிதைகளைப் படைக்க வேண்டுமென்பதே எனது பெரு விருப்பம்.

வருங்காலத்தில் ஈழத்துக் கவிதைத் துறையில் பெயர் சூட்டக் கூடிய ஒரு கவிஞராக இக்பால் அலி சிறப்புற வேண்டும். மேன்மேலும் காத்திரமும், கலைச்செழுமையும் மிக்க கவிதைகளை அவரிடமிருந்து எதிர்பார்க்கின்றேன்.

**கலாநிதி. துரை மனோகரன்,**
தமிழ்த்துறை
முதுநிலை விரிவுரையாளர்,
பேராதனை பல்கலைக் கழகம்,
பேராதனை,
இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்
**அ.ஜமாலுதீன்,** எம்.ஏ.,எம்.ஃபில்.,
தமிழ்த்துறை,
மு.சா.ச.வக்பு வாரியக் கல்லூரி,
மதுரை-625 020, தமிழ் நாடு.

# அணிந்துரை

'முற்றத்திற்கு வாருங்கள்' என்னும் கவிதைத்தொகுப்பின் மூலம் நம்மையெல்லாம் ஒரு விசாலமான கவிதை முற்றத்திற்கு அழைத்துச் செல்கிறார் இக்பால் அலி. பத்திரிகையாளரான இவர், இத்தொகுப்பின் வாயிலாகக் கவிதை முற்றத்தில் காலடி எடுத்து வைத்துள்ளார்.

இந்தக்கவிதா முற்றத்தில் எத்தனையோ வண்ணக் கோலங்களை வரைந்து தள்ளியிருக்கின்றார் இக்பால் அலி. ஆம். அத்தனையும் காலத்தின் கோலங்கள். கோலம் வரைவதென்றால் புள்ளிகள் இல்லாமலா? இங்கே இக்பால் அலியின் கவிதையுள்ளம் மனித நேயத்தையே புள்ளிகளாக விதைக்கின்றது. இந்த விதையிலிந்து தான் இவரது கவிதை நாற்றுக்கள் கான்முளை பரப்புகின்றன.

இலங்கை நாட்டு மலையக மக்களின் அதல பாதாளத்து அவல வாழ்க்கை இந்த முற்றமெங்கும் பரந்து காணப்படுகின்றது. பரஸ்பரம் மனிதநேயத்தோடு ஒத்திசைந்து வாழவேண்டிய மனிதன், மனிதநேயத்தைத் தொலைத்து விட்டுச் சீரழிந்து சின்னா பின்னப்பட்டுப் போயிருப்பதைக் கண்டு இக்பால் அலியின் கவிதைநெஞ்சம் கண்ணீர் வடிக்கிறது.

உரிமை பறிக்கப்பட்ட, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மலையகத்து பாட்டாளிமக்களின் பிரதிநிதியாக நின்று, அடக்கியாளும் பாட்டாளிமக்களின் பிரதிநிதியாக நின்று, அடக்கியாளும் அரக்கவர்க்கத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர். இந்த ஒடுக்கப்பட்டவர்கள் தங்கள் உள்ளக்குமுறல்களைப் பகிரங்கமாக எடுத்துரைப் பதைக்கூட, ஆளும் வர்க்கம் தடை செய்துவிடுகிறது.

எனவே முற்றத்திற்கு வந்து முறையிட இயலாதவர்களாகி, இவர்கள் கொல்லைப்புறங்களிலேயே அழுது பிரலா-பிக்கின்றனர். இனியும் எத்தனை நாளைக்குத்தான் இந்த ஜனங்களின் அழுகைக்குரல் கொல்லைப்புறத்திலேயே முடங்கிக்கிடப்பது? முற்றத்திற்கு வந்து முறையிட வாருங்கள் என அழைப்பு விடுக்கிறார் கவிஞர்.

"இந்த
அழுகையின் குரல்கள்
கொல்லைப் புறத்தில்
கேட்பதைவிட
முற்றத்து
வெளிவாசலிலேயே
கேட்கவிரும்புகிறோம்" (முற்றத்திற்கு வாருங்கள்)

இக்கவிதை நூலின் தலைப்பு இந்தவகையில் கச்சிதமாகப் பொருந்தி நிற்கிறது.

அழுகைக் குரல்களும் சோகவரலாறும் கவிதை நூலெங்கும் வியாபித்துக் கிடக்கின்றன. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடியது வள்ளலாரது கவிதையுள்ளம். இங்கு மலையக மக்களின் வாடிய உயிரைக் கண்டு வாடுகின்றது இக்பால் அலியின் இளகியநெஞ்சம்.

"உயிரோடு போராடும்
சோகங்கள்
சொந்தங்களைத் தேடி
மணக்கவலையில்
உயிர் நீத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்க வரலாற்றைப்
படித்துப் பாருங்கள்" (கறைபடிந்தசோகம்)

என்று வாசகர்களுக்கு சோக வரலாற்றைப் படிக்கத் தருகிறார் இவர்.

வக்கரித்துப்போன வர்க்கபேதங்களின் விளைவாக இன்று இலங்கை மண்ணின் யாழ் நகரம் உயிர்த்துடிப் பற்று ஓய்ந்து கிடக்கிறது. கவிஞர் யாழ் நரம்பு பற்றி கவிதை இசைக்கின்றபோது இந்த யாழ் நகர அவலங்கள் நம்மையு-மறியாமல் காதுகளில் எதிரொலிக்கக் கேட்கிறோம்.

"முகம் சுளித்து
முணு முணுக்கின்ற
முகாரி ராகங்களுக்கு
முதுகெலும்பான
யாழ்நரம்பு
உயிரற்றுப் போச்சு" (மனவருத்தம்)

என்று 'மனவருத்தம்' கொள்கிறார் கவிஞர்.

'பாதகம் செய்பவரைக் கண்டால் – நாம்
பயங் கொள்ளலாகாது பாப்பா !
மோதிமிதித்து விடு பாப்பா – அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா !'

என்று பாப்பாவுக்கும் ரோஷமூட்டினான் பாரதிப் பாவலன்.

இப்படிப்பட்ட பாதகர்களை மோதிமித்து, அவர் முகத்தில் காறி உமிழ்ந்திடத் தவறிவிட்டது பாட்டாளி வர்க்கம். அது மட்டுமன்றி, அப்பாதகர்களுக்கு,

மேளம் கொட்டும்
மடையர்கள் நாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முதலைகளை
ஸ்வாமிதரிசனம்
செய்து செய்து
மண்ணோடு மண்ணாக
மறைந்துவிட்டோம்" (தொடரும் சடங்கு)

என்று மலையகத்து மக்கள் கூற்றாகவே, அப்பாட்டாளிகளின் நலிவுக்கும் காரணம் கூறுகிறார் இந்தப் பாட்டாளி.

உழைப்பாளிகள் தங்கள் ஆற்றலைத் தாங்களே அறியத் தவறிவிட்டார்கள். பாகன் கட்டளைக்குக்கட்டுப்பட்டு, பிச்சைக் காசுக்காகத் துதிக்கை நீட்டுகிறது யானை. தன் ஆற்றல் எத்தகையது என்பதை யானை உணராத காரணத்தினால் பாகன் அதை அடக்கியாண்டு சுரண்டிப் பிழைக்கிறான்.

ஆனால் உழைக்கும் மனித இனம் பகுத்தறிவுள்ள, சிந்திக்கத்தெரிந்த மானுட ஜாதியன்றோ? மனிதன் தன் சிந்தனையை - ஆளுமையை அறிந்துணர்ந்து உரிமைக்காகக் குரல் எழுப்பவேண்டும். இல்லையேல் மனித வாழ்க்கை ஜடவாழ்க்கைதான் என்கிறார் கவிஞர்.

'இந்த
நியாயமற்ற நியதிகள்
தூக்கில் தொங்கும்
பிணங்கள்தான்'(தொடரும் சடங்கு)

இதே கருத்தை வேறொரு தொனியிலும் எடுத்துரைக்கிறார் இக்பால் அலி.

"தீராத நோயாளி
குடியிருக்கும் நாட்டில்
உலகை ஏமாற்றும்
வைத்தியர்கள் தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டியடித்துக் கொண்டு
முன்னுக்கு நிற்கின்றானர்" (முடியா காரியம்)

ஏமாற்றுக்காரர்கள் முன்னேறுகிறார்கள் என்றால், அதற்குக்காரணம் ஏமாறுகின்ற மக்களே என்பதை இங்கிதமாக எடுத்துரைக்கின்றார்.

இவ்வாறாக இப்பாத்திரட்டு முழுவதிலும் மனிதநேய இழை ஊடும் பாவுமாகப் பின்னிக்கிடக்கிக் காண்கிறோம். மானுடத்தைப் பிணைத்திருக்கும் விலங்குகளிலிருந்து மனித இனம் விடுதலை பெறவேண்டும் என்ற பெருங்குரல் இவருடைய கவிதாமுற்றத்தில் ஓங்கி ஒலிக்கின்றது.

இக்பால் அலியின் சமூகப் பிரக்ஞையும் மனிதநேய தாகமும் கவிதை நீரைப் பருக முனைந்துள்ளன. எனினும் வாசகர்களின் கவிதைத் தாகத்தை இவை போதிய அளவுக்குத் தணிப்பனவாயில்லை.

ஒரு பிள்ளைக் கவியின் ஆரம்ப 'வருகைபருவப்' பாடல்கள் இவையாகையால், இங்கே கவிதை ஓட்டமும் கவித்துவத்-துள்ளலும் சரளமாகக் காணப்படவில்லை. இருப்பினும் இந்த அரும்பின் முயற்சியைத் தாயுள்ளத்தோடு ஊக்கப்படுத்த வாசகநெஞ்சங்கள் கடமைப்பட்டுள்ளன.

கவிஞரின் சமூகக் கரிசனையும் மானுடப்பற்றும் கவித்துவத்துடன் இன்னமும் இறுக்கமாகக் கை கோர்த்துக் கொண்டு, மென்மேலும் இலக்கிய முற்றத்திற்கு வருகை தருதல் வேண்டும்.

இக்பால் அலியின் கவிதைப்பணிகள் இவ்வகையில் தொடர்வதற்கு எம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள் !

4.7.1996.

அன்புடன்,
அ.ஜமாலுதீன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ..........................அபிமானங்களின்......
## வரிகள்...

இக்பால் அலியின் கவிதைகளை நுகர்ந்து சுவைத்தேன். அதில் அவரது மனச்சாட்சியின் ஊடாக ஒரு முழு மனிதனைக் காணுகின்றார். தாழ்த்தப்பட்ட தோட்டத் தொழிலாளர் மக்களுக்காக புரட்சிகர அனுசாசனம் ஒன்றை படைப்பிலக்கியமான புதுக்கவிதை லாகிரில் யதார்த்தபூர்வமான உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்கின்றார்.

"முற்றத்திற்கு வாருங்கள்" என்னும் இவரது கவிதை தொகுதி கலை இலக்கிய வரலாற்றில் ஒரு இன்றியமையாத சிறந்த படைப்பாகும். இவரது பணி தொடர்ந்து மேலோங்க என் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

ஏ. எல். கலீலுர் ரஹ்மான் பீ.ஏ.,
செயலாளர்,
தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடம்,
பறகஹதெனிய.

தம்பி இக்பால் அலியின் கவிதைகளில்
கவித்துவமும், சமுக நோக்கும் பரவிக்
கிடைப்பதை காணக்கூடியதாக
இருக்கின்றது. இவரது கவிதைகளை
வாசிக்கும் போது, மானுடத்தை
நேசிப்பவராகவும், தனது கவிதையால்
மனுக்குலத்தின் விடிவுக்கு தனது பங்கையும்
செலுத்த வேண்டும் என்ற வெறியும்
கட்டியம் கூறுகின்றது. இவரது கவிதைகள்
ஒரு தொகுதியாக வெளிவருவதை அறிந்து
மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் பல படைப்புக்களைத்
தர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**எம்.எம்.பீர்முகமது**
51, முகாந்தரம் வீதி, மாத்தளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எங்கள்*
*ஊரின்*
*எங் கெங்கோ மூலையெல்லாம்*
*சிவந்த நெஞ்சங்கள்*
*எத்தனை? எத்தனை*
*அத்தனையும் - இங்கு*
*எழுத்தாய்*
*உருவமாய்*
*இக்பால் அலியின் கவிதையில்*
*என்*
*நெஞ்சத்தை நெருடுகின்றது.*

**கவிஞர் இரா.நித்தியானந்தன்**
விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானம்,
பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.

எனது நீண்ட கால நண்பரும், மாணவருமாவார் பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டதாரி மாணவரான இக்பால் அலி. இவர் சூடாமணிப் பத்திரிக்கையிலும் பத்திரிக்கையாளராகப் பணிபுரிகிறார். ஒரு பத்திரிகையாளருக்குரிய ஆர்வமும் கவிஞருக்குரிய சமூகப்பார்வையும் இவரிடம் இயல்பாகவே காணப்படும் பண்புகளாகும். மனித நேயம் கொண்ட இக்பால் அலியின் கவிதைகளில் மானுட நேயம் விழையோடுகிறது. சமூகத்தின் அடிமட்ட மக்களின் வாழ்க்கை அவலங்களையும் சமூகச்சீர் கேடுகளையும் தமது கவிதைகளின் மூலம் வெளிக் காட்டியுள்ளார். கவிஞர் இக்பால் அலியின் கவிதைகள் நூலுருப் பெறும் வேளையில் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை நல்குகிறேன்.

**இரா.சிவலிங்கம்B.A.Hons**
திரித்துவக் கல்லூரி, கண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

முகங்களில் கரியைப் பூசிக்கொண்டு இது நிரந்தர உலகம், தற்காலிக உலகமல்ல என்று தமது வாழ்க்கையை அழகுபடுத்த நினைப்பவர்கள் விஸ்வரூப தரிசனம் பெறும் மாபெரும் திடக் கண்காட்சிச் சாலையில் யானும் ஒரு பார்வையாளனானேன்.

அங்கு பூமித்தாய் படும் அவலங்கள் பிறையாக வளரும். சூரிய உஸ்ணம் கடும் கோடையைத் தழுவிக்கொண்டு நிற்கிறது. வரண்ட மணராகங்கள் இரத்த வாடையினால் குளிர்காய்கின்றன. அகோரப் பசியுடைய என் ஈர இதயத்தின் தழும்புகள் வயிறு நிறையாத பசியால் என் சிந்தனை பேனாமுனைப் பாதங்களுக்குப் பாதையாகின்றன.

நவநாகரீகம் எனும் பாடம் தங்கு தடையின்றி நடைபெறுகின்றன. இந்த ஆர்வம் நிறைந்த பாடப் பரப்பில் உத்வேகமான இவைாத ஆயுத கலாசாரம்தான் போதிக்கப்-படுகின்றது. இதனை எல்லோரும் விரும்பிப் படிக்கக்கூடிய மிகப் பரபரப்பான ஓர் அசல் பாடத்திட்டம் என்று அறிமுகப்-படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டமிட்ட அமுலாக்கல் இருக்கும் வரைக்கும் அருள் மழை வேண்டித் தொழுது பிரார்த்திப்பதில் எந்தவித அர்த்தமுமல்ல. இங்கு தாராளமாக கண்ணீர் மின்சாரம் இயற்கையாகவே உற்பத்தி செய்யப்படும். இவைகளில் ஊடாகத்தான் ஒலி-ஒளி தொட்டு அனைத்து அத்தனை விடயங்களும் நிவர்த்தி செய்யப்படுகின்றன. இவர்களுக்கென ஒரு யுகம் இருக்கும் மட்டும் நம்க்கென ஒரு மனிதாபிமானமுள்ள சமதர்ம மனிதனைக் காண என் கவியாத்திரை கலா தரிசனம் பெற்று உலாவருகின்றது.

கால நிர்ணயம் செய்த கோலத்தால் வர்ண நிலாக்களாய் தினந்தோறும் இரந்து உயிர் வாழ்வதற்கு மர்ம வசூல் மன்னன் புஷ்பித்துக்கொண்டிருக்கின்றான். வாழ்க்கையின் முகவரி தொலைந்தவர்களாகவும் ......... அகதிகளாகவும் ......... இடம் பெயர்த்தவர்களாகவும் ......... படபடவெனத் துடிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயங்களாகவும் ........ என் உள்மனக் கவியாத்திரை மகோன்னதமிக்க பாரதி அடிச்சுவட்டினைக்கொண்டு சத்திய எழுத்துக்களை நிரந்தரமாக்க முனைந்துள்ளன.

ஈன நிலைகண்டு புனர்வாழ்வு நிவாரணத்திற்காப் பாடுபடுவோரின் கூட்டத்தில் யானும் ஒரு இலக்கியக் கூட்டாளியானேன். இங்கு இரகசியமாய் ஆலோசாண நடாத்தும் கூட்டத்திலே எந்த மனிதன் நல்ல மனிதன் என்று தேடும் ஆய்விலக்கியம் என்னிலிருந்து பீறிட்டுப் பாய்ந்து பிறக்கிற உணர்ச்சி என்கின்ற ஈர நினைவுகள் நிரந்தர இலக்கை எய்திய அம்பாக என் நூல் பரிணமித்துள்ளதா என்ற தேர்வினை என்னிய வாசக நெஞ்சங்கள் பகுத்தறிவின் வாயிலாக மனமுவந்து சரியாகத் தெர்வு செய்து ஏற்றுக்கொள்ளுவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

சொப்பனத் தமிழின் மொழியைக் கற்க துணைநின்றுழைத்த உண்மையான இலக்கியத் தின் திருவருடியைக் காண்பித்த என் அன்பு மச்சான் ஐ. எம். அப்துல் காதர். என் எழுத்தாற்றலுக்கு களம் அமைத்துக்கொடுத்து எனது கவிதைகளை தொடர்ந்து பிரசுரம் செய்த தினகரன், வீரகேசரி, சிந்தாமணி போன்ற தேசியப் பத்திரிகைகளும், ஏனைய விடிவு, ப்ரிய நிலா, பவளம் போன்ற பல சிறு சஞ்சிகைகளுக்கும், அதன் பிரதம ஆசிரியர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

குறிப்பாக தினகரனில் ஏ.எச்.சித்தீக் காரியப்பர், லீலா ராமையா, ஜயசீலன், வீரகேசரி துணை ஆசிரியர் குறிஞ்சிச் செம்மல் வி.தேராஜ் போன்றவர்கள் என் கவிதைத் துறைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த என்னிதய அன்புக்குரியவர்களுக்கும்.

இத்தொகுதி தக்க காலத்தில் கூடிய சீக்கிரமாய் உதிக்க வேண்டுமென்று மிகுந்த ஆர்வம் காட்டிய தோழர் இரா. அ. இராமன், பேனாவின் இதழினை விரித்து என் அடிச்சுவடு மலர அன்பினியக் கருத்துக்களைத் தந்த என்னருமை கருத்தாக்களான பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா, கலாநிதி துரை மனோகரன், பேராசிரியர் ஏ. ஜமாலுதீன் போன்றவர்களுக்கும், இலக்கிய உருவத்தால் உள்ளிணைந்த அன்பின் க. ப. சிவம், அந்தனி ஜீவா, புதுநகரான்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்ரப், நிந்தமணாளன், மாளிகை அஸ்ஹர், ஆர். எம். இம்தியாஸ் அஷ்றப், ஏ. ஸமட் போன்றவர்களுடன் இதனை அழகுற தட்டச்சு செய்து தந்தவர்களான என்னினிய அ.முஹம்மது அப்ஸான் ஷக்உறீர், சகோதரி ஏஞ்சலா இராமன் போன்றவர்களுக்கும், தமிழ்நாட்டிலே இந்நூல் அச்சு வாகனமேறி வெளிவர தனது முழுப் பங்களிப்பினையும் வழங்கிய அந்நாட்டுச் சகோதரர் மொஹிடீன் உலவிக்கு எனது தனிப்பட்ட முறையிலான நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இந்நூலுக்கு அழகுற அட்டைப்படம் வரைந்துதவிய நண்பர் குணம் அச்சக உரிமையாளர் மற்றும் ஊழியர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறுதியாக இக் கவிதைத் தொகுதியை மனமார நேசிக்கும் என்னினிய வாசகப் பெருமக்கள் இந்நூலில் ஏதாவது தவறுகளை, தடங்கல்களை காண நேரின் பெருமனதுடன் மன்னித்து அதனை ஏற்றுக்கொண்டு, எதிர்காலங்களில் மேலும் பல நூல்களை உங்கள் முன் நான் வெளிக்கொணர்வதற்கு வேண்டிய ஒத்துழைப்புக்களையும், உதவிகளையும் எனக்கு வழங்குவீர்கள் என்ற நம்பிக்கைகளுடன் விடைபெறுகின்றேன்.

**நன்றிகள்**

445,பேராதனை வீதி,
கண்டி.

**இக்பால் அலி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவு தோன்றும் நேரம்

பௌர்ணமி நிலவு
மலையக பூமியைச்
சீவியம் காக்க
வஞ்சத் தோட்டாக்கள்
சீதனத் துப்பாக்கி.

❖ ❖ ❖

எரியும் கனவு
சோலைவனப் புஸ்பங்களை
ஒன்றிணைத்து
பாலைவனத் தொட்டிலில்
மறியல் போராட்டம் நடாத்த
உசார்த்துணைப் பட்டாளம்
யதார்த்தமாய் ஜவாலிக்க
தியாக
விமர்சனம் இல்லையே.

❖ ❖ ❖

தாய்க்கொரு தாலாட்டுப்
பாடவந்த-பிரம்மன்
ஊருக்கோர் விடையளிக்கும்
நொண்டித் தத்துவங்களுடன்
'நான்' எனும் அகந்தையை
கூடக் கூட்டும்
கூட்டங்கள் கூட

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஜா உரிமை
'தஸ்தாவேஜுக்கள்'
ஒரு பணி முடிவை
சிலநாள் தொழிலை நிறுத்தி
நெடுநாள் பட்டினி போட்ட
வழக்கும்
பிச்சைப் பாத்திரம்
நிரப்பிப் பிடிக்க
தொடரான
விரகதாபம் எடுக்கிறது.

❖ ❖ ❖

அந்திப் பொழுதில்
காயம்பட்ட
செக்கச் சிவந்த மேனியை
வெண் பனி மேகம்
மூடி மறைக்க அஸ்தமிக்கும்
அழகிய வண்ண நிலவு
தாக்குதல் முறியடிக்க
கிளம்பிவர வேண்டும்.

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நாள் நல்ல நாள்

நல்ல மனம்
அந்தி வெயிலில்
சூடான ரத்தங்களை
அமைதியைத் தரக்கூடியதாக
ஆறப்போடுகின்றது.

தகுதிக்கு மட்டும்
இதயத்தின் அழகு
வேண்டுமென்று
அலங்கரிக்கப்படவில்லை.

ராம ராஜ்ஜியம்
மக்களின்
சுயம்வர மண்டபத்திற்கு
எப்படி வாசியாக
இருக்கின்றனவோ
அதே வகைதான்
இதயத்தின் அழகு.

வருகைக்கு
மாலையிட்டவர்கள்
ஒன்றாக இருந்து
கலந்துரையாடுவதைத்தான்
வட்டமேசை மகாநாடுகள்
விரும்புகின்றன.

ஒரு
கைதட்டலுக்காகவேண்டி
கைக்குட்டைக்
கொடிக்கம்பத்தில்
பறக்க ஆசைப்படுவது - இது
நன்றிக்கு
முறைகெட்ட செயல்.

நிறம் மாறுபவர்களின்
நிலைப்பாட்டைப்
புரிந்துகொள்ள
வேண்டுமானால்
நம் நாட்டில்
அம்மை நோய் வந்தமாதிரி
அந்தத் தழும்புகள்
பல ஆசாமிகளை
வெளிப்படையாக
எடுத்துக் காட்டுகின்றன.

இன்று
எங்கு பார்த்தாலும்
நாக்குப் பலமும்
ஆயுத பலமும்தான்
போட்டி போடுகின்றன.

ஆனால்
நேர்மையான
ஜனநாயகத் தேர்தலில் நின்று
போட்டியிட
அஞ்சியஞ்சி சமுதாயத்திற்கு
நஞ்சைத்தான்
தேடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாங்குழலை
அடுப்பூதுகின்றவர்களிடம்
கொடுத்தால்
அதன் தாற்பரியங்களை
அறியாதவராய்
அடுப்பைத்தான்
ஊதவரும்.

மனக் கடலுக்குள்
முத்துள்ள
நல்லவர்களிடம்
அந்தப் புனித புல்லாங்குழலை
கையளித்தால்
பூமி ராஜ்யம்
தனி இனிமையில்
இன்பங்காணும் தன்மைக்கு
ஆட்சி அமைப்பு
ஒரு நந்தவனமேதான்.

இந்த
காலகட்டம்தான்
பீரங்கிப் பிரசார
தேர்தல் வேட்டுக்கள்
புதிய புதிய
ஒப்பந்தங்களைச்
செய்துகொள்ளக் கூடிய
அறிமுகமான காலம்.

காலமெல்லாம்
வெள்ளைக்கொடி காட்டி
வெள்ளத்தில் துவண்டோம்
இனியாவது
சமாதானத்தின்
நிழலாக நின்று
சமத்துவம் பேசுவோம்.

அன்புள்ள
நம் நாட்டு மக்களே
பண்புள்ள அபிப்பிராயத்தை
நல்லபடி
நாளைய மக்களுக்கு
இன்றே அறியச் செய்ய
ஒரு
முடிவு கட்டுங்கள்.

மத்திய
மலைநாட்டில் இருந்துதான்
ஊற்றெடுக்கும்
'பண்பு' என்னும் நன்னீர்
ஏனைய
கரையோரப்
பிரதேசங்களுக்கும்
தாகம் தணிக்க
வாய்க்கால் வழியாக
சலசலத்துக் கொண்டு
ஓடியது என்று
பெயரெடுக்க வேண்டும்
அல்லவா?

மலையக மக்களே
தாங்கள் எல்லோருடனும்
கைகுலுக்கிக் கொண்டு
உங்கள்
உயர்ந்த
உரிமை வாக்குறுதியை
மனச்சாட்சிக்கு விரோதமின்றி
நிலைநாட்ட
இதுவே நல்ல நாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலைக் கொழுந்து

தொழிலாளர்
முதலாளியாக
வேண்டும்
என்பது
அவசியமில்லை.
முதலாளி
தொழிலாளியின்
மனசைப்
புரிந்துகொண்டால்
போதும் என்ற
பெருமனங்
கொண்டவர்கள்தான்
இவர்கள்
தோட்டக்காட்டான்
என்றால்
அப்பாவிகள்
என்றுதான்
அர்த்தங்கள்
அவர்கள்
அவ்வப்போது
அதனை விடவும்
கீழ்மட்டமாகத்தான்
தமது கண்களால்
தங்களைப்
பார்க்கின்றார்கள்.

இந்த இளகிய
உள்ளங்களின்
குடியிருப்பில்
கண்களில் மண்ணைத் தூவும்
நான் என்னும்
தலைவன்
இலகுவாக வந்து
அக்கிரமக்காரர்களைப்போல்
ஆக்கிரமித்துக்கொள்ளவே
மாட்டான்.

இவர்களுக்கெதிராய்
கசங்கிய
நிற ஆடை அணிந்து
கொண்டு
சமூகப் பார்வையில்
மூர்க்கணங்கயிறு
பூட்டப்பட்ட
மக்கள் தொண்டன்
யான் என்று
மானுடத்தை மாற்ற
எடுக்கும் முடிவு
சோடா
போத்தல்களைப் போன்று
சுடலை ஞானம்
பேசுகிறது.

எண்ணவே முடியாத
வண்ணங்களில்
தூண்டில்
போடுவதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா
சண்டாளிக்குத்தான்
தாராள மனசு
என்னும் வித்து
இவர்களுக்குப்
பெரும் சொத்து
கரும்பலகையில்
வெண்கட்டியால்
எழுதிக் காட்டும்
தீர்வும் திட்டங்கள்தான்
இவர்களின்
எண்ண மேகங்கள்
குதிரைப் பந்தயத்தில்
ஜெயிக்கப்போவது
யாரென்று
தெரியாமல்
ஜாக்போர்ட்
பரிசுக்காய்
போட்டிப் பணத்தை
முட்டாள்தனமாக
முதலீடு செய்யும்
முகாரி ராகங்கள்தான்

இன்றைய
திருவிழாக்கள்
இதுபோய்
சிக்குண்ட
இடங்களில்
சிக்குப் பிரிக்கப்
பொன் நேரத்தைக்
கடுகதியாக்கும்
அழகு நிலாக்களின்
அன்பினை நாடு
பனிப் பண்புகளின்
ஈரம் காயும்
நாளினைக் காணவாம்.

தினசரி
தவம் செய்து
வைகறைப் பொழுதின்
விலாசம் தேடி
அலைகின்றவர்களின்
உண்மையான
லட்சியங்களின்
முகவரிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறை படிந்த சோகம்

மலையக மாதாவில்
உதித்தெழுந்த
ஒரு வண்ண நிலவு
நோய்வாய்ப்பட்டது.
உடன் பிறப்புக்கள்
ஈடுசெய்ய முடியாமல்
அரசாங்க
மருத்துவ மனைக்கு
எடுத்துச் செல்லப்பட்டது.

துடியாய்த் துடிக்கும்
வரண்ட நிலவுக்கு
துணை வந்த
உடன் பிறப்பை
அடையாளக் கார்ட்டை
காட்டல் சொல்லும்.

அதன்
திருநாமம்
குறிஞ்சிப் பூவில்
முத்திரை பதிக்கப்பட்ட
தங்கவேலு தங்கராஜா
என்றதைக் காண
நெருப்புக் கண்கள்
சுட்டுப் பொசுக்க
நேரம் பார்க்கும்.

இந்தக்
கண்ணீர்க் காட்சியை
வேடிக்கை பார்ப்போர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர் உண்டு
பெற்றெடுத்த
உள்ளம் மட்டும்
உருண்டு உருகி
அழுகைக் குரலில்
தன் பிள்ளையை
விடச் சொல்லிக்
கெஞ்சிக் கதறும்.

"கடவுளே!
இதென்ன சோதனை
என் புருஷனோ
மரணப் படுக்கையில்
தத்தளிக்கையில்
என் செல்வ மகனுக்கு
இதென்ன தண்டனை
அவனைக்
கைது செய்யாமல்
வீட்டு விடுங்கள் ஐயா ...
என்று அழுது புலம்ப,
ஏதோ
ஒரு வண்ணம்
அடையாள அட்டை
ஒரு திசையில்
பறந்து சென்று
விழுந்து கிடந்தது,
அவனும் அவ்விடம்
தள்ளி விடப்பட்டான்.

எவ்வழியோ
மகனை மீட்டெடுத்தோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த வழியே
வார்ட்டில்
அட்மிட் பண்ணாமல்
நோயாளரைக்
கொண்டு செல்வோம்
என்ற எண்ணம்
மரணப் படுக்கையைச்
சந்திக்க நேர்ந்தது.

காவற்படை
சோதிப்பதில்
உயிரோடு போராடும்
சோகங்கள்
சொந்தங்களைத் தேடி
மனக் கவலையில்
உயிர் நீத்த
துக்க வரலாற்றைப்
படித்துப் பாருங்கள்.

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்கள் மலரட்டும்



மலையக மண்ணில்
புரட்சிப் பூக்கள்
நீதியைத் திருத்த
அவசரக்
கலாட்டாக் கலியாணம்
பண்ண வேண்டும்.

செந்தமிழின்
ஒலிநாதம்
தொழிலாளர்
மணிக் கண்களில்
பட்டுத்தெறித்து
பூபாளப் பூந்துணர்கள்
வெளிச்ச வனமாகும்.

காதுகொடுத்துக்
கேட்கும் சத்தங்கள்
கோளாறு சேர்ந்திருந்தால்
கொழுந்து பறிப்பதை
நிறுத்திவிட்டு
விஷயத்தைக் கவனிக்க
எழுந்து
நிற்க வேண்டும்.

பாட்டுக்கு
ஒரு தாளம்
போட்டுக் கொண்டு
நாடகம் ஆடும்
துரோக ஆசாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிக்க
நிபுணர் படைகள்
நியமிக்க வேண்டும்.

அணி அணியாய்
தோள்களிலே
சுமந்து செல்லும்
மண்வெட்டி
புடங்கெல்லாம்
மாற்றி அமைக்க
மூளைகளைக் கொஞ்சம்
சிந்தனை ஓட்டத்தில்
செலவு செய்யுங்கள்.

வாரது வரட்டும்
போவது போகட்டும்
என்ற நிலைப்பாட்டில்
தேயிலைச் செடிகளை
கிள்ளி ஆய
எழுதுவதை
பூக்கள் மலர
எழுதுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவருத்தம்

முகம் சுளித்து
முணுமுணுக்கின்ற
முகாரி ராகங்களுக்கு
முதுகெலும்பான
யாழ் நரம்பு
உயிரற்றுப் போச்சு.

நிசப்தம்
ஆரவாரப்பட்டு
கண் துடைக்கும் சுற்றுலாவில்
குருதிப் புனலால்
குருபூஜை செய்ய
திட்டம் கட்டி
நித்தம் தொடர
தத்தித் தவழும்.

குறிஞ்சித் தென்னை
மரத்தோலைகளில்
ஈக்கில் வகையும்
திசை வழியில்
பழுத்த ஓலைகளும்
அவ்வழியில் செல்ல
சாகடிக்கும்
கருவண்டுகளுக்கு
குருத்தோலைகளும்
கும்பிட(வும்) வேண்டும்.

மலையிலிருந்து
கால் சறுக்கி
பள்ளத்தாக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்த காயத்திற்கு
சாராயத் தைலத்தை
சஞ்சீவியாகப் பாவித்தால்
சஞ்சலம்
முண்டியடித்துக்கொண்டு
முன்னுக்கு வரும்.

உறைபனியில்
இளங்கதிர் பட்டு
பன்னீராய்க் கரைந்து
ஆனந்தக் கண்ணீராக
வெள்ளோட்டம் ஓட
ஆரம்ப
வாய்க்கால் வழி
எம்மலைகளிலில்லை.

ஓ......
மலையக மக்களே
மாடான உழைப்பின்
மனவருத்தத்தை
உங்களைத் தவிர
வேறு யார்தான்
அறிவாரோ...

பாழாய்ப்போன
அந்த
மனச்சஞ்சலத்தை
போக்காட்டுவதற்கு
போதாந்தம் பேசி
நல்ல
முடிவுக்கு வாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தோஷம் அழைக்கிறது

சூடான
வார்த்தைகளைப்
பச்சை வெயில்
அங்கீகரிக்கும்.

கைக்கடும்
உபசாரச் சிறப்புக்களை
ஆட்டிப் படைக்கும்
ஆஷாடபூதி வேதாந்திகள்
ஆஷார வாயிலை
மூடிவிட்டு
ஆடுமாலை ஹோட்டலில்
ஆடிப்பாடுகிறார்கள்.

வீணர்களின்
செப்பிடு வித்தைகளை
அப்படியே
தொட்டுத் தழுவும்
போலிப் பிராமணர்கள்
சுகமான நாட்களை
நேசிக்கின்றார்கள்.

ஒரே மனதுடைய
திறனாய்வு
திருப்திகரமாய்
சீர்திருத்தத்தில்
பிரதிபலிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைக்கல்லில்
நிரூபிக்கப்பட்ட
உண்மை வடிவங்கள்
அறவே
அழிந்து போகின்றன.

சூடான நடவடிக்கைகளை
குளிரான முறையில்
சிலாகிக்க வழியுண்டு
அந்த
நல்வழியும்
மனக்கிலேசத்தோடு
உவப்பான பணிகள்
வருவோரை வரவேற்க
காத்திருக்கின்றன.

தொழிலில் மட்டும்
வீரம்மிக்க மராட்டியர்களாக
உடலை
வதைத்துக்கொள்வதில்
அர்த்தமில்லை.
சமுதாயத்தை
ஊன்றிக் கவனித்து
கொள்ளும்
நுணுக்க(மு)ம் வேண்டும்.

தீமையை விட்டு
சந்தோஷமடைய
நன்மையே செய்ய
நல்வழி அழைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் சடங்கு

கோடரியைக் கொண்டு
பிளக்கும்
சகுண சஹஸ்ரநாம அர்ச்சனை
சுடுகாட்டுக்குப்
பயணம் செல்கிறது.

மிதிலையில் ராமன்
வில்லை முறிக்க
ஜனகனின் சொல்தான்
வென்றது.
ஆனால்
போக்கிரி
இரவைப்
பகலாக்க நினைக்க
யார் சொல்லினால்தான்
வெலலும் என்ற
போட்டி மனப்பான்மை
கச்சை கட்டும்.

ஆபரணமான செல்வாக்குகள்
விதேசிகளின்
கடைவாய்க்குள்ளேயே
பற்பேதத்தைக்
கட்டுகின்றன.

இந்த ஜாம்பவான்களை
நிரந்தரமாக
அரியணையில் ஏற்றத்தான்
அட்டவணைப்படி
ஊருக்கு அழைக்கிறார்கள்.

தூக்கத்தைக் கெடுக்கும்
வல்லூறுகளின் செய்கைக்கு
மகுடாபிஷேகம் செய்து
கௌரவிக்க
அமாவாசைகள்தான்
மணிமாலைகள் செய்யப்
பொருத்தம்
தெரிவிக்கின்றன்.

சொற்ப காலம்தான்
தாழ்த்திப் பார்ப்போம்
என்ற விடுகதையை
மீண்டும்
ஒரு தடவை
மிகைப்படக் கூற
வெட்கம் இல்லையா?......

ஜெயசீலனுக்கு
நன்கு தெரியும்
தான் சமகாலத்தில்
சமாதானப் புறா
இல்லை என்பது.

இது
சகஜங்களுக்குள் நடக்கும்
முற்றுப்புள்ளியற்ற
முனகல் போராட்டம்.

திகைக்க வைக்கிற
விரக்திகளை
வீதிக்குக் கொண்டுபோய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முச்சுத்திணற வைக்கும்
சான்றுகளை
ஆதரவாதிகளின் சமாதிகள்
வரவேற்கின்றன.

நடந்து
அலுத்த வீதிகளின்
அருவருப்பான பிரவாகம்
கிளறக் கிளற
வீதிகளில்
ஊர்வலம் போகின்றன.

திட்டமிட்டு எழுதாத
முன்னுரைகள்
அணிவகுப்பில்
பிரத்தியேகத்தனங்கள்
ஆகின்றன.

கோரமான
சாந்த ரசமுள்ள
கற்பனையை
ரஸாதீனமான (அடங்கா)
உதாசீனப்படுத்தும்
அரிய
ஒலிச் செல்வம்.
இரவெல்லாம்
ஓடியாடி
ஆயாசத்தைத் தீர்க்க
வழிதப்பிச் சென்று
பரிதவிக்கும் நொண்டிகளில்
ஒன்றுகூட
உருப்படியில்லை.

பல்லை
நெறு நெறுவென்று
கடிப்பவனைத்தான்
மிருதுபாஷிணி சூடி
தங்கத் தாலி கட்டி
மேளம் கொட்டும்
மடையர்கள் நாம்.

நாம் முதலைகளை
ஸ்வாமி தரிசனம்
செய்து செய்து
மண்ணோடு மண்ணாக
மறைந்து விட்டோம்.

சூரியன் உச்சியில் ஏறி
மத்திய மலைநாட்டைக்
கண்டபின்தான்
மேற்கு வெளிக்கும்
ஆனால்
சூரியன்
பட்டாளி படுக்கும்
மத்தியைக் காணாமல்
"கிழக்கு உதித்தால்தான்
மேற்கு வெளிக்கும்" என்ற
தத்துவம்
எப்படி வரும்?

இந்த
நியாயமற்ற நியதிகள்
தூக்கில் தொங்கும்
பிணங்கள்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேமன்ட் படுக்கை



தாவணிக் கனவுகளுக்கு
காவல் இல்லையா?
இந்த
நித்திரை சமூகத்தில்
பேமன்ட் படுக்கை
கற்பழிக்கப்படுகிறது.

அடா
மழை பொழிவதனால்
அடுப்புநனையும்
மண் குடிசை கூட
பேமன்ட்
படுக்கையர்களுக்கு இல்லையோ.

இவைகள் தான்
கண்டும் காணாத
கண் மணிகளுக்கு
சூரிய வெளிச்சத்தில்
அ(து)வசியப்பட்ட
வியாபாரச் சந்தையாக
தோற்றமளிக்கும்.

அன்பு கொண்டு
காணும் விழிகளுக்குள்
கள்ளம்
கபடமற்ற
வெள்ளை உள்ளங்கள்
சர்வதேச
வீடமைப்பு ஆண்டில்
வீடெடுக்கும்
வீறாப்பு இல்லையே
என்று கலங்கும்
உள்ளங்களும்
இல்லாமலும் இல்லை.

❖◆○❖◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றத்திற்கு வாருங்கள்



அணுகுண்டுகளின்
வெயில் வெளிகளில்
புது வேகத்தோடு
பெரும் காயங்கள்
உதடுகளை ஈரமாக்கத்
தண்ணீர் தேடுகின்றன.

இறுகத் தழுவின
வன்முறைகள்
செல்லும் தூரத்தைக்
கணக்கிடக்
கவர்ச்சி நெடி வீசியும்
முடிவுரை விளைவுகள்
உயிர்பெறவில்லை.

இழுபட்டு
மிதிபட்டு
அடிபட்டு
ஓடிவரும் பரிதாபங்களின்
சீர்கெட்ட நிலை
தினமும்
துடிப்பதிலேயே வாடிக்கை.

நல்ல
வசதிகளை
அமைத்துக்கொண்டு
ஆமை வேகத்தில்
ஆதிக்க வெறியர்கள்
பல நிர்ப்பந்தம் விதித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை ஆதிக்கத்தைப்
நிரப்பிக் கொள்கின்றனர்.

செயல்
உழைப்போடு
உறங்கிப்போன
மனிதத் தன்மைகள்
மேலும் மேலும்
இடரான மணி மாலைகளை
அணிந்து கொள்ள
விருப்பம் தெரிவிக்கின்றன.
முன்னேற்றம் ஏற்படுத்தும்
உறுதியும் கூட
எடுத்த காரியாத்தில்
லாபம் எற்படுத்த
பசுமையின் நிழல்களை
ஓரவஞ்சகப்படி
அழிக்கின்றன.

முடிந்த
படு பாதாளங்கள்
எதனையும்
தனக்கு இஸ்டப்படி
பறித்துக்கொள்ள
தனிச் சுதந்திரம்
வழங்கப்பட்டுள்ளது.

ஆற்றல்
அரங்கத்திலிருந்து
அமைதிப் படைகளின்
காட்டுமிராண்டித்தனமான
அட்டூழியம்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நச்சு வாயுக்களாக
வெளிக்கிளம்புகின்றன.

அவைகள் எவ்வாறு
அப்பாவி மக்களின்
ரத்தத்தை
உறுஞ்சும் உரிமையைப்
பெற்றது
என்பதனைத் தவிர்த்து
அவைகளை
எவ்வாறு
வழியனுப்பலாம்
என்பதைப் பற்றிக்
கொஞ்சம் சிந்தியுங்கள்.

மனவரங்கில்
இரக்கமே இல்லையா
எத்தனையோ
சடலங்கள்
இம் மண்ணில்
புதைக்க இடமின்றி
குவிந்து கிடக்குதே.

ஒரே
குறிக்கோளை
முன்வைத்து
கெஞ்சிக் கேட்கும்
நியாயங்கள்
இனியும்
தண்டிக்கப்படனுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்
தெய்வீக எண்ணங்கள்
குறிஞ்சிப் பூ நிலத்தில்
அகலப் பாய் விரிக்க
முடியாதா?

நெஞ்சில்
அலை மோதும்
பூரண அமைதி
வாடி நிற்பதை
வாழ வைப்பவர்கள்
வரவேற்க முடியாதா?

இந்த
அழுகையின் குரல்கள்
கொல்லைப்பிறத்தில்
கேட்பதை விட
முற்றத்து
வெளி வாசலிலேயே
கேட்க விரும்புகிறோம்.

இப்போதே
விரைவாக கண்ணீரின்
வெப்பத்தின் தன்மையினை
எல்லோரும்
அளந்து பார்க்கும் வண்ணம்
முற்றத்திற்கு வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை சாட்சி



தவறுகள்
நிராயுதபாணியாக
நின்று
தன் உணர்வின் போராட்ட
வளர்ச்சியில்
கணிசமான பங்கினை
ஒட்டுண்ணிகளிடம்
முதலீடு செய்துள்ளது.

அடக்குமுறைக்கு
முகங்கொடுக்க இயலாத
இனவாத உணர்வு
பாஸிஸவாதப் போக்கில்
இனக்கலவரங்களை
நடத்த வந்த
பயங்கரவாத ஆக்கிரமிப்பு
வெளியேற்ற முடியாத
நம் நாட்டு
இந்திய ஜவான்களைப்
போன்று
குடிகொண்டுள்ளது.

சுயாதீனமாக இயங்கும்
விடுதலைப் போராட்டம்
சில நேரங்களில்
அப்பாவிப் பொதுமக்களை
உணர்ந்து பார்க்காமல்
பிற்போக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையூறுகளைச் செய்ய
அஞ்சா நெஞ்சங்களையே
அழைக்கின்றன.

இதன் வாயிலாகச்
சிதறுண்டு
ரத்தக் கண்ணீர் வடிக்கும்
நம் நாட்டின்
வரலாற்று முடிவை
எழுதத் தெரியாத
மடையர்கள் என்றுதான்
எம்மைச் சொல்ல வேண்டும்.

பாவம்
அப்பாம் பிறந்த
பச்சைக் குழந்தைக்குப்
பச்சைத் தண்ணீரை
நாக்கில்
தொட்டு வைக்கும்
தன்மைக்கு இல்லாமல்
தாகம் தணிக்கும்
குடிநீரை
போராட்டக் கருவியாகப்
பயன்படுத்தி
எமது நியாயமான
போராட்டத்தை
மாசுபடுத்துவது
எமக்கே நல்லதா?

ஒரு தீர்வை
முக்கிய விசயமாகக்
கொள்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில்
ஆயுதங்களைத் தேடிச்
சேகரிப்பதல்ல
முன்கூட்டி
நல்ல
பரிசுத்த இதயங்களைத்
தேட வேண்டும் என்ற நிலை
வேண்டும்.

ஆனால் இப்போ
நம் நாட்டில்
அந்த நல்ல நிலை இல்லை
எல்லோரும்
கல்மனம் படைத்த
மனிதர்களாகத்தான்
உள்ளார்கள்.

நல்ல
மனித இதயங்களை எல்லாம்
எமலோகத்திற்கு
அனுப்பிவிட்டு
மீளப் பெற்றுக்கொள்ள
முடியாதவர்களாய்
உள்ள நாம்
உயிர்களைத்
துடிக்கத் துடிக்க அல்லவா
சாகடிக்கின்றோம்.

ஆசிய ஜோதிக்கு
வரைவிலக்கணம் கூறும்
புத்தனின் நாட்டில்
கேவலமாகப் படைக்கப்பட்ட
மனித வர்க்கம்தான்
என்று
ஒவ்வொருத்தரும்
தன்னுடைய நெஞ்சில்
கை வைத்துக்கூற
முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹர்த்தால்



தாக்குப் பிடிக்க
முடியாத ஹர்த்தால்
துவிச்சக்கர வண்டியின்
வால்வூபின் ஊடாக
அடைக்கப்பட்ட காற்று
புயலாக வெளியேறுகிறது.

சுதந்திர
உணவைத் தேடி
நிலத்தை
தீச்சுப் பொறுக்குவதற்கு
நாட்டில்
விதை பொருள் இல்லை.

வீர அஞ்சலி
தேசிய வீதியில்
ஒட்டிய பின்
கிழித்துப்போட
சண்டாளிகள்
போராட்டம்
ஆமை வேகத்தில்
இணையும் சமாதானத்தை
தந்திர மந்திரத்தில்
வேலி பிரிக்க
இனக் கட்டைகள்
நாட்டப்படுகின்றன.

❖◆○❖◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனசாட்சி

கண்ணால் காணும்
உண்மை ஜாதகத்தை
சாட்சி
சொல்லத் தயங்கும்
சாணைக்கல் வாழ்க்கை

அநீதி
கர்ப்பஞ் சுமந்த வண்ணம்
அப்பாவி மக்களை
அழித்தொழிக்கும்
பாலைவனக்காடு.

வளர்பிறைத்
தொட்டிலிலே
ஊமை உணர்வுகள்
மந்த கதியில்
மயங்கி விழுகின்றன.

நாட்டுப் பாடல்
நரம்பு இல்லாமல்
இறப்பதாக இருந்தால்
மரபு என்கின்ற
வியாக்கியானம்
விடியலைக் காண்பது
அரிதிலும் அரிது.

நீதியின்
தீர்ப்பு என்பது
குற்றவாளியை
நிரூபிப்பதற்கு
சாட்சி இல்லாமலானால்
கண்ணாடிப் பாத்திரத்தை
கீழே போட்டுடைத்தால்
உடையும் என்பதையும்
கையில் வைத்து நசித்தால்
கையை
வெட்டும் என்பதையும்
மனம் நொந்தோர்
கதைத்துப்போன
கதையாகப் போச்சு.

சட்டங்களை தண்டிக்க
ராஜதந்திரம்
ஆளும்போது
ராக்கனவு
ஒருநாளும் விடியாது.

பழிக்குப்பழி வாங்குதல்
பழக்கப்பட்ட
தொழிலாகப் போனால்
நீதியின் சாயல்
ஆத்திரம் தீர்த்திடும்
என்ற நினைப்பு பலருக்கு.

பொறுமைக்கு
உரமூட்டும் மன்னிப்பு
பொறுத்தது போதும்
உதவாக் கரைகளை
உதைத்தெறிந்து
நீதிமுரசுக்கு
உரமூட்டுங்கள்.

சட்டம்
ஆடும் விளையாட்டை
விலைக்கு வாங்கெண்ணாமல்
வேறு
விதை
விதைப்போம்
மனட் சாட்சிகளே
விழித் தெழுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கூத்தானா முதலிடம்

அனுராகம்
வீசுவதற்காகவே
ஆதிக்கக் காற்று
இங்கு பிறந்தது.

சூழல்
மாசடைந்த செய்தியை
செவிகள்
கேட்டுக் கேட்டு
கோபத் தீயில் குளித்தும்
காயப்பட்ட ஈரம்
எப்போ
வற்றிப்போகும் என்ற
நிரந்தரக் கேள்விதான்.

ஒரு காலத்தில்
மனித இனம்
இன்னதுதான் என்று
ரசிக்கப்பட்ட நாட்டில்
இன்று
மனிதன் என்றால்
அர்த்தங்களே வருவதில்லை.

ஒவ்வொரு
மனித முகத்திலும்
அகத்தின் அழகு
கெட்டுப்போய்
பருமச்ச அமைப்பில்தான்
உள்ளது.

சில வார்த்தைகள்
அணுகுண்டுச்
சப்தங்களைப்போல்
வதந்திகளைக் கிளப்பி
அடிக்கடி
அகதி முகாம்களை அமைக்க
விஸ்வரூபம் எடுக்கும்.

இந்த நாடு
அவசிய
அவசரப் பிரயாணத்துடன்
எந்தப் பிரயாணமும்
செய்ய முடியாத
நிலையைத்தான்
பொதுமக்களுக்கு
நமஸ்காரமாகச் செய்கிறது.

சில
கட்டங்களில்
நிம்மதியில்லாமல்
வாழும்
எம்மைப் பார்த்து
ஆகாய நட்சத்திரம்
ஒரு நியாயத்தை
நிலைநாட்ட
கீழ்இறங்கி
வருவதற்கு முன்
இடையில்
மறைந்திடுவதன்
அர்த்தம்தான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம் மனச்
சிறகுகளை விரித்து
அது நின்ற தூரம்
சற்றுப் பறந்து போய்
விசாரித்து வர
எவருக்குத்தான் விருப்பம்"

"யார் வந்தால்
பிரச்சினை தீரும்
யார் போனால்
பிரச்சினை தீரும்
என்ற
தீவிர தேர்தல்
பிரசாரம்தான்
இங்கு நடைமுறையா?"

"ஆனாலும்
நம்
மனத்தோட்டப் புல்வெளியில்
சமாதானம் என்ற
சொல்லுக்கு
இடமே இல்லையா ?"

அநேகமாக
அநியாயங்களை
ஆதரிக்கத்தான்
தனித்தனி நின்று
ஒரே வீணையை
ஒரே மேடையில்
முழங்கிக் கொண்டு
இருக்கிறார்கள்.

இவை அனைத்தையும்
அமர்ந்திருந்து
பார்க்கும் மக்களுக்கு
எழுந்து நின்று
ஒரு கேள்வியாவது
ஏன் கேட்க முடியாது?

நின்றால்
நிற்பது தான்
இருந்தால்
இருப்பது தான்
என்ற வியாதி
நமக்கு இருக்கு மட்டும்
நம் விதி
அவ்வழியே தான்

வளரும் பயிர்
தன் அழகின் சந்நிதியில்
சிநேகிதம்
வைத்துக் கொள்ள
அக்கறை அற்றுப் போய்
தன் வீரச் சாவுக்குத்
துணிவே தோழனாய்ச்
செல்வதன் காரணத்தை
அன்பினால்
ஆராய்ந்து பாருங்கள்.

தீர்வு
சரியாக இருந்தால்
சிந்தனைக்கு
முதலிடம் உண்டு.

❖◆○❖◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலை மாறும் போது

தலை கீழான
பிரம்ம தீர்த்தனம்
சந்திக்கும்
சந்தேகத்தில்
வீண் புரளிகளின்
ஸ்கலிதம்
அடி முடிபெறும்.

ஆத்ம
நேசத்திற்கென்ன
மணவிழா
மணியடிக்கும்
நேரம் வந்தால்
முண்டாசு கட்டும்
சண்டாளி
அன்புக்குரிய
சிரஞ்சீவியாகிறான்.

மது
மதிமயக்கும்
மது அன்பனுக்கு
உயிர்
நட்பு நரம்புகளில்
பிரிழி ரணங்கள்
குமிழ் முட்டையிடும்
ரதம் பண்ணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன
அடிவாரத்தில்
விதைத்திட்ட
விதைகள்
யமதர்ம வடிவில்
தொட்டில் கட்டி
ஆடும் ஆதிதாளம்
நீதானே.

அக்கிரமக்காரர்கள்
தவறுகளுக்கு
துணிந்தவர்கள்.
உன்
பால் நிலா
கூடிய சீக்கிரம்
மாறும் என
நான்
நினைத்ததே இல்லை.

சுக்கிர ஈர்ப்புகள்
திரட்டிய சொத்து
பித்து
வெறி பிடித்து
பெரிய குழப்பம்
என்றால் உறவை
பகைத்துக் கொள்ளலாமா?

இது சின்னஞ் சிறிய
அற்ப விசயம்
மடத்தனப்பட்ட
இனிய மணாளனே
சிந்தித்துப் பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறம் மாறும்
வாய்
பிழந்துள்ளது.
ஜகமனைத்தும்
சாட்சிகள் நாங்கள்.

தூக்கில்
தொங்கும்
உயிர்களுக்கு
கெஞ்சிப்
பிச்சை கேட்ட
அஞ்சனம் தான்
வஞ்சிக்கின்றது.

உதட்டாசையில்
சிக்கிக் கொண்ட
மூர்க்கம்
அநியாயமாகப்
போவதை
இடமளிக்கலாகாது

புனிதப்
பொக்கிஷங்கள்
நீடூழி காலம்
அஞ்சலி சிலாக்கியம்
சோலைப் புஸ்பங்களாக
வாழ்த்துகின்றன.

❖◆○❖◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேடுங்கள்

பாலைவனத்தில்
வேகுதணலில்
சூழலை
மாசுபடுத்தும்
புகை மண்டலம்
தேவ தொழிலாளியையும்
புழுதி மண்டலமாக்கும்.

வரதட்சணை
நோய் பிடித்த
பெண்டிர்களுக்கு
ஆலை ஒரு சாலை.

ஓடும்
இயந்திரப் பொறிகள்
மேனியில்
அடிமைக் குருதியை
உறிஞ்சிக் குடிக்கும்.

குத்தப்பட்டு
தீட்டப்படும்
நெல்மணிகளுக்கு
சுகபோக போசாக்கு வாரம்
இன்னும் உமிதனில்
உதமேறவில்லை.

மூச்சு விடாமல்
முனகி வேலை செய்யும்
கூலிப் பெண்களைப்
இரவு பகலின்றி
சாக வைப்பதுடன்
கொண்டையைப் பிடித்து
இழுத்து அடிப்பதுவும்
அதிகாரம்
உறுத்துகின்ற வேதனை.

இது வரையும்
பொறுமையை
ஏற்படுத்திப்
பழகினப்போன பாதை.

வாழ்க்கை
நெற்சுமையைப்
புதுமையான
'அலர்' மிசினுக்குள்
கொட்டித் தீர்ததால்
உண்ணும் அரிசியாக
வெளிவருவது
நீற்றுப் பூச்சாகவே உள்ளது.

இந்தத்
தொழில் வாழ்க்கை
வளம்பெற
பெண்டிர்களே
ஆலைப் புழுதிகளை அகற்றி
சுத்தம் சுகம்
தேடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாரி



மரணத்தின்
சதா விடுதலைக் கோஷம்
நடுக்கடலில்
கல்லைக் கட்டி
போட்டுவைத்த மாதிரி
எழுதப்பட்டுள்ளது.

சுபபோக
சுபதினத்தை
கொந்தளித்த உள்ளங்கள்
புயல் அடித்து
மரங்கள்
விழுந்த பின்னும்
தேடி அலைகின்றது

கல்வக் கூடிய
சட்ட மிதியடி
விலைக்கு வாங்குவதற்கு
இந்த மண்ணில்
காணாமல் உள்ளது

தேடாத
இடமெல்லாம்
தேடினாலும்
ஒப்பாரிச் சமாதி
வியர்த்துப் போன
முகாரியாகவே
கொண்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனமுவந்த நல்வரவு

குண்டுச் சப்தங்களின்
இளம் சிரிப்பு
சஜோ குணநலங்களில்
வேடிக்கை விளையாட
முன்வராத கட்டங்களை
எதிர்பார்க்கின்றன.

மனக்கவலையில்
அலைந்து செல்லும்
அப்பாவிப் பொதுமக்களின்
உயிர்களைத்தான்
எதிர்மாறான
இளஞ் சிரிப்பு
தன் வீர வலைக்குள்
அகப்படுத்துகின்றது.

கண்கெட்டவர்களின்
கொள்கைப் பிரவாகம்
வெறுப்பூட்டும்
நிழல்களில் நான்
புதிய புரட்சி மன்னர்கள்
தங்கி உள்ளார்கள்.

ஆபத்துக்களை
உட்கார்ந்து ரசிக்கும்
மலைப்பாறைகள்
குத்துக் கல்லாட்டம்
இருப்பதைத்தான்
விரும்புகின்றன.

போய்த்
திரும்பி வர முடியாத
விமானங்கள்
பறக்கும் பொழுது
கொடூரமான சிக்கலில்
மாட்டிக் கொண்டு
கீழே இருக்கும் நாம்
எதை நினைத்து
பெருமூச்சு விட முடியும்

இங்கு
மர்மங்களின் வாசலில்
மௌன ராகம்
பொம்மையாட்டம்
அங்கும் இங்கும்
ஆடும் நிலையில்தான்
உள்ளன.

ஒருபிறம்
உறுமிக்கொண்டிருக்கும்
காற்றை
பக்கம் பார்த்து
வீசுந்தன்மைக்கு
அமுக்கங்கள் விடாதபடி
சமநிலைப்படுத்துகின்றன.

இதன் வழி
நம் மக்களின் வழியில்
கடைப்பிடிக்கத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம்
நமக்குக் கற்றுத்தந்த
பாடம்.

இதைக் கொஞ்சம்
நம் நாட்டு மக்கள்
உணர்ந்து பார்க்க
மாட்டார்களா என்ற
கேள்விக்கணை
நீடித்த நோயில்
அவஸ்தைப்படுவதைத்தான்
விரும்புகின்றோம்.

காரணங்களை
நீதியற்ற
சட்டமன்றக் சாட்சிகள்
நமக்குத் தேவையில்லை.

சட்டங்கள்
இல்லாத இடங்களில்தான்
இப்போ
சட்டமன்றக் கல்லூரிகள்
கட்டப்படுகின்றது.

நாம் நினைத்தால்
சட்டங்களை
ஆக்கவும் முடியும்
அழிக்கவும் முடியும்
இதை
நம் நாட்டில்
யாரும் சொல்லிப்
புரிந்துகொள்ள
வேண்டியதில்லை.

உயிர்நாடி
மூச்சிருக்கும் வரை
மனிதாபிமான
நம்பிக்கை பூணுமானால்
பெற்றிக்காற்று
வேதனைகளின்
பக்கமே வீசும்.

மனமுருகும்
பிரிய நிலாக்களிடம்
அரும் பெரும் குணங்களை
தெளிந்த நீரில்
காணக்கூடியதாக
ஆக்கி வைத்தபின்
சட்டமன்றக் கல்லூரிகள்
கட்டுவதற்கு
கட்டட அத்திவாரம்
போடலாம்.

முதலில் பொரும்பாகம்
விழுந்து
புலம்பியழும் தன்மைக்கு
புலவல்களை (வெறுப்புக்களை)
புலவன் பாடும் ராகம்
நம் காதுகளில்
இனிக் கேட்பாதிருக்க
பாடுபட்டாத்தான்
நீதியும் நியாயமும்
கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல தருணத்தில்
வெற்றி நம் பக்கம்
என்றும்
கைகொடுக்க
காத்துக் கொண்டுதான்
இருக்கிறுது.

மூட்டப்பட்ட பகை
விடுதலைக்கான புகையாக
மாறிக்கொண்டிருப்பதை
நாம் அனைவரும்
நம் கண் கரித்தாலும்
அதைத் தாங்கிக்கொண்டு
ஒரு வீர தியாகமாய்
மனமுவந்து
நல்வரவளித்தல் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையிலே எடுத்துக்காட்டு

எதிர் வழக்கு
விவகாரத்தில்
மறுதலை நேர்முகம்
சந்திக்கும்
சந்திப்பு மகத்தானது.

நடுத் சந்தியில்
சுடுசாம்பரை
விபூதிகளாகப் பூசிக்
கொள்ளும்
ரத்தக் கொதிப்பு
மகரிஷிகளாகும்.

வம்பில் அகப்பட்ட
சாக்குருவிச் செய்கைகள்
வாக்குறுதி மாறாதிருந்து
செய்யும் பொய்கை
ஜகத்தினை அழித்திட
எண்ணும் மடனம்.

ஈற்றில்
முழக்கமிடும்
அவநம்பிக்கைக் குரல்கள்
பலவாறெல்லாம்
அழுது புலம்புகின்றன.

மனதினை
நோக வைப்பதுதான்
மகிமைக் குளிர்ச்சி

கண்டு பிடிக்கும்
மலர்விழி
கண்ராதிகளைத்தான்
தட்டியெழுப்ப
அயராதுழைக்கின்றன.

கெக்கலி
கொட்டிச் சிரிக்கும்
அரக்கர்களிடம்
அரவம் உண்டு.

நெடுநாட்கணக்கில்
சீற்றம் பெறாத சீரழிவுகள்
ஊறிக் கொண்டிருந்தால்
எடுத்துக்காட்டாக
ஒன்றுமில்லை.

❖◆○❖◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல் நெஞ்சு

உச்சிவானில்
தேனருவி ஓட
மதிய உணவில்
புத்துயிர் சேர்ந்தது.

இருதரத்தில்
ஈவிரக்கமற்ற உஷ்ணம்
பிரிவினை நோக்காட்டை
மேலும் வேகவைத்தது.

நுட்பமான தாவம்
கர்ப்பம் தரிச்சது
புனித கற்புக்களை
கலங்க வைக்கத்தான்.

குப்பையைக்
கிண்டிக்
கிண்டிக்கொண்டிருந்தால்
பொறாமைக் கல்லைத்தான்
பொறக்கக் கிடைக்கும்.

படிக்காத பாடத்தின்
தாளாண்மைப் பாஷையை
தாழிட்டுக்கொண்ட கதவு
மெல்லத் திறந்தால்
உதட்டின்
உண்மை முத்தங்களை
மூர்ச்சையில்
பெற்றுத் தரும்.

மனித வாழ்க்கையில்
ரசாபாசா(தப்புத்தவறு)
நடப்பது
மாற்ற முடியாத
விதியில் அமைந்த
ஒரு பிரிவு
அதைத் திருத்தி எழுத
விஸ்வரூபம் எடுத்தவர்களின்
தலையெழுத்து
மலையெழுத்தில் இல்லை.

சரித்திரத்தின்
சாதனைகளை
சாட்சிகளாய்
எழுதி வைக்க
கல்நெஞ்சு
தயாராக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகம் கண்ட செண்பகம்



கை நிறைய
மருதோன்றி பூசிய
மைனா
தன் சிறகை விரித்துப்
பறந்துபோய்
திரும்பிப் பாராமல்
தீர்க்க சுமங்கலியாகிறாள்.

முச்சந்தியில்
தீபம்
நிறம் மாறாத
குரோட்டன்களுக்கு
தண்ணீர் ஊற்றி
நேர்ச்சை செய்யும்.

இருந்தாற்போல்
ஒரு தினிசு தெளிவுபட்டு
வேறு ஒரு சம்பந்தம்
செய்து கொள்வதை
பிரியமான நெஞ்சம்
நேரடியாகக் காணும்.

ஊர்ஜிதம் பண்ணி
பரிதாப
உணர்ச்சி ரோகமாய்க்
குறுக்கே நிற்க
இதயம் தாங்கா நிலையில்
புத்தி தடுமாறுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கக் கடலுக்குள்
மகாவலி கங்கைதான்
சங்கமிக்கத் தகுதி
சிற்றோடைகளுக்கு
சுதந்திரம்
வழங்கப்படவில்லை.
பிரஜாவுரிமை
கௌரவம் பார்ப்பதால்.

ஜீவநதிக்கு மேல் போக
ஆசைப்பட்டு
கடதாசித் தாளினால்
கப்பல் செய்து விட்டேன்
ஒரு சதிகாரக் கூட்டம்
பாரிய பாறாங்கல்லை
நான்
பூஜித்த கப்பல்
கவிழ்ந்து போகக்
கூடியதாக
தூக்கிப் போட்டு விட்டது.

வம்பினால் வரும்
சலங்கை ஒலி
பல்வேறு கோணங்களில்
தத்துவ
வித்துக்களைத் தூவி
எச்சப்
பழரசங்கள் உண்ணும்
ஆனந்த பைரவிகள்
காதல் கிளிகளின்
குருதியை
உறிஞ்சிக் குடிக்கும்போது
பரவசம் அடைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளின்
ஆழங்களை அறியாது
ஆழ்கடலுக்குள்
நச்சு
வாயுக்களைக் கலக்கும்
சதிகாரப் படகோட்டிகள்
அனியாயமாக
மீன்கள் சாகும்போது
நிச்சயமாக
படகு கவிழ்ந்து
சாக்காலம் கிட்டும்.

தாஜ்மஉறாலின்
அத்திவாரத்திற்குள்
தென்னம் வேர்
படர ஆரம்பித்தால்
அதன் சுவர்கள்
வெடிக்கத்தான் செய்யும்
ஒரு நிரந்தரப்
பிரிவுக்கான
காரணங்கள்
ருஜுப்படுத்தப்படுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிவிளையாட்டு



மின்வெட்டு
துப்பாக்கி வேட்டுக்கள்
என்று சொல்வதைவிட
துப்பாக்கி வேட்டுக்கள்
மின்வெட்டுக்கள் எனலாம்.

வானத்தில்
மட்டும்தான்
மின்வெட்டல்களைக்
கண்டறிந்தோம்.

இப்போ
வானத்திலில்லாத
நவீன கம்பியூட்டர்
முறையில்
தரைகளில்
துப்பாக்கி வேட்டுக்கள்
மின்வெட்டுக்களாக
சாதனை புரிகின்றன.

இரண்டும்
ஒரே தன்மையைத்தான்
கொண்டிருக்கின்றன.

ஆனாலும்
இரண்டுக்குமிடையில்
சிறு வித்தியாசங்கள்.

வானத்து
மின் வெட்டும்போது
புகையைக் காண முடியாது.
துப்பாக்கி வேட்டு
மின்வெட்டும்போது - சற்று
புகையைக் காணக்கூடியதாக
இருக்கும்.

இவைகளுக்கு
மரணம் என்பது
முற்றுப்புள்ளியல்ல.

விதியின்
வெறியாட்டு
விளையாட்டுக்கள்
குற்றுயிராய்க்
கிடக்கும்பொழுது
என்ன செய்ய ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞனின் ஜீவக்குரல்

நம்நாட்டுச்
சோகக் கதையை
நான்
யாரிடம்
சொல்லியழ?...

எழுதி எழுதி
என் கையும்
சோர்ந்து விட்டது.

மனம்
நொந்து நொந்து
என்
கற்பனை உயிரும்
தேய்ந்து போய்
முணுமுணுக்கின்றது.

போர்ப்பீரங்கியான
ஒரு பேனாவிடம்தான்
நிராயுதபாணியாக
நிற்கின்றேன்.

என்
உணர்வுகளுக்கு
என் பூமித்தாய்
ஆராதனை செய்ய
வழி தவறிவிட்டாள்.

தனக்குத்
தானம் செய்யாதவளிடம்
தான் அவளின்
காலில் விழுந்து வணங்க
விருப்பமில்லை.

அதனால்தான்
அயல்நாட்டு
நந்தவனத்தை
நினைத்துப்பார்க்க
ஏகமனதாக முடிவு செய்தேன்.

ஆனால் அங்கும்
சிம்மாசன அந்தஸ்து
அப்லவரங்களில்
மாட்டிக்கிட்டதாகச்
சில கிசு கிசுக்களை
பரவுகின்றன.

இங்கு
என்ன செய்ய?
எடுத்த முடிவுக்குக்
காரணங்கள்
நிறை சுமையைத்
தூக்கிக்கொண்டு
இருக்கத்தான் செய்கின்றன.

இரண்டும்
கெட்ட நிலையில்
தலைகுனிந்து நிற்கிறேன்.

என்
தாய்நாட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகக் கதையை
நான்
யாரிடம் சொல்லியழ?

பூத்திட்ட
புதிய புத்தாண்டில்
சர்வ கோலாகலங்கள்
பொலிவைப்
பெறுமா? பெறாதா
என்பது
சென்றுவிட்ட
கடைசி
மார்கழி மாதத்துச்
சம்பவங்களை
சற்றுப் பின்னுக்குத்
திரும்பிப் பார்க்க
வேண்டும்.

இப்போது வந்த
நந்தவனக் காற்று
எப்போது வந்து
தாலாட்டும் என்று
இருண்ட அறைக்குள்
பதுங்கு குழி தோண்டி
தன்னைத் தான்
பாதுகாத்துக்கொள்ள
மரணப் படுக்கையில்
ஒளிந்து நிற்கிறேன்.

ஆழ்கடல்
மீன்பிடிக்கச்சென்ற மீனவன்
திசை தப்பி
கலங்கரை விளக்கைத்
தேடி அலைவது போன்று
சிறு வெளிச்சமாவது
தென்படுமா என்று
பல ஆண்டுகள்
பெரு ஆவலோடு
எதிர்பார்த்தேன்.

அதனைப்
பிரமுகராக்கிப் பூஜிக்கின்ற
பைத்தியம்
பூரணமாகக் குணமடைய
இந்த ஆண்டிலாவது
என் நாட்டு மேனியில்
ஒளி விழுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருப்பம்

நெஞ்சைக்
கீறிக் கொள்வதில்
புண்ணியமில்லை
தீக்கிரையாக்கப்பட்ட
உடல் உறுப்புகளுக்கு
'ஷேலாயின்'
ஓர்
ஆஸ்பத்திரி மருந்து.

குடும்பி கட்டிய
சில நேரங்களில்
மானப் பெண்களின்
கற்புகளை மதிக்காது
வதனங்களை
நாய் கடிப்பது போல்
கடித்து நாசப்படுத்தும்
பூசாரிகள்.

ஜனநெருக்கடியான
பஸ்(சு)க்குள்ளே
கைகாட்டும் மானிடனுக்கு
வீணடிப்பு விஜயம்
செலவாகிப் போகிறது.

சம்மணம் கட்டி
வாழும் வாழ்க்கை
உரக்கக் கத்த
உறப்பு உதவாது.

ஜோசியப்
பறவைக் குஞ்சை
ஜோடிக்கப்
பயன்படுத்தும் பயணங்களில்
பரம பகலோன்
இருட்டடிக்கப்படுகிறான்.

கண்ணீர்ப் பூக்கள்
தொடர்ந்து வாழும்
நிலைப்பாட்டை
திருத்தியமைக்க
திருப்பம் தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல மனம் வேண்டும்

ஓ......மனமே
நீ ஏன் மற்றவர்களைத்
தீண்ட வேண்டும்.

அநீதிக்கு
அச்சுறுத்தல் செய்பவனே
அச்சாணியாக இருப்பான்
என்று யாராலும்
விடைபகர முடியவில்லை.

நடத்தைகள் அனைத்தும்
திசைமாறி
திக்குத் தெரியாத காட்டில்
அலைமோதுகின்றன.

உள்ளத்தைக்
கட்டுப்படுத்த
உள்ளம் உள்ளவர்களை
தேடிப்பார்க்கிறேன்.
ஆனால் யாருமே
கண்ணுக்குப் புலப்படவில்லை.

மனிதன்
பெரும்பாலான தவறுகளைத்
தெரிந்துகொண்டுதான்
செய்கிறான் என்பதை
ஊர்ஜிதப்படுத்த
பல நியாயங்கள் உண்டு.

இந்தக் கலியுக காலத்தில்
காலத்தை வென்ற
அராஜகம்தான்
தலைதூக்கி உள்ளது.

ஆவேசத்தோடு
பொங்கிவரும் மனித நீதி
மரணித்து விட்டது.

இன்று
இதைத்தான்
சட்டமன்றத்தில்
உயிர் பீடமாக வாதிடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்கும் தெரியாத திசை

திசை
இயந்திரங்களின்
இயல்பினை
மக்களுக்கு அறிமுகப்படுத்த
காற்றின் நாகரீகத்தைப்
பயன்படுத்துகின்றன.

இரவுகளில்
வர்ணக் கண்ணாடி
போட்டுக் கொண்டு
நிலாவைத் தேடி
வீதி வலம் வருபவர்கள்
தாங்கள் தான்
ஊருக்கு உழைப்பவர்கள் என்று
'விசிட்டிங் காட்' அச்சடித்து
பங்கிடுகின்றார்கள்.
புகழ் மாலைகளைத்
தன் கையால்
தன் கழுத்துக்குப்
போட்டோம் என்று
மேடை நாற்காலியில்
சொல்ல முடியாமல்
வாய் அடைத்து
இருப்பவர்கள் தான் இவர்கள்.

விசேடமாக இவர்கள்
பலபேர் பார்த்திருக்க
தன் வயிற்றை மட்டும்
நிறைப்பதற்கு
அலங்கரிக்கப்பட்ட ஆசனத்தில்
அமர்வார்கள்.

இங்கேயே
நேரடியாக
இவர்களின் வேற்றுமைப்
போக்குகளை
மிகத் தெளிவாக ஆராய
நடாத்தப்படும் ஒருகூட்டம்
எடுத்துக் காட்டும்.

மக்கள்
நிலத்தின்
சேற்றுப் புழுதிப்பட
வியர்வை வேக்காட்டில்
விருப்பு வெறுப்புடன்
கீழே அமர்ந்து
இருப்பார்கள்.

உயர மேடையில்
அமர்ந்து இருப்பவர்கள்
தான்
மேடைக்குத் தலைவன் ;
அந்த குளிர்பானத்தையும்
அருந்துவேன்;
எந்தக் கருத்தையும்
தன் சுயவிருப்பத்திற்கு
வெளிப்படுத்துவேன்;

தன்னைத்
தட்டிக் கேட்க யாருமில்லை.
ஆட்சிக் கிரீடம்
ஆட்டிப் படைக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்த முடிவை
மாற்றாது என்று
கூக்குரல் இடுவார்கள்.

எள்ளையும்
ஏழாப் பிரித்து
எல்லோருமாய்
பகிர்ந்து உண்ண வேண்டிய
பழைய மொழியை
பாழ் கிணற்றினுள்
தள்ளிவிட்டு
நடத்தை மிதவாதிகளின்
வாயைப் பார்த்திருந்து
என்ன யோகம்?

இறுதியில்
மிச்சம்
எச்சி ஊறியதுதான்.

இதமான
தென்றல் காற்று அடித்தும்
ஏன்
நம் உடம்பு
வியர்க்க வேண்டும்?
அப்படியானால்
அந்தக் காற்றைப்பற்றிச்
சற்று சிந்திக்க வேண்டாமா?
அறிவுப் பண்பெறும்
வானிலை அறிக்கை
சரியாக இருந்தால்
இந்தப் போக்கிரி காற்றுகளை
கண்டு பிடித்து
உடல் தக்கபதிலடி
கொடுக்க முடியும்.

வானிலையே
பழுதடைந்திருக்கும் பொழுது
இந்த நாட்டில்
எந்த வறுமை
ஒழிப்பும், சீர்திருத்தமும்
சரிவராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியின் அழைப்பு



மீண்டும்
ஒரு அமைதியின்
அழைப்பு மடல்
பறந்து தெரியும்.
இதைத் தேடித் தேடி
கண்களும் ஓய்ந்தது
கால்களும் தேய்ந்தது.
இன்னும் இது
இருட்டு வெளிச்சத்தில் தான்
பார்ப்போர் அற்ற அனாதையாய்
தரையை வந்து சேர மனமின்றி
ஆகாயத்தில் பாத்திக்கட்டி
அழுது புலம்புது.
இந்த நிழலின்
கீழ் இருந்து கொண்டு
எத்தனையோ மகாநாடுகளை
மன்றாடிக் கூட்டி
மரணப் பதிவெழுதும்
நாட்களை உறவாடி
சந்தித்திருப்போம்.
ஆம்......
நொந்தமனம்
வெந்து போகாதிருக்க
ஆறுதல் வார்த்தைகளைச்
சொல்லிச் சொல்லி
சணப்படும் வேகம்
புதுப்பிக்கப்பட்ட
பட்டுப் போர்வைதான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு திரைச்சீலைகள்
சோர்வற்றுக் கிடந்த
இந்தப் பேனாதான்
மீண்டும் ஒரு முறை
பௌர்ணமி வெளிச்சத்திற்குள்
நிழலாடும் அமைதி மடலை
மனதார நேஸிகின்றது.
காலம் பதில்
சொல்லும் நாட்களைத் தேடி
வெகு தூரம் சென்று
அலைய வேண்டியதில்லை.
தன்னைத்தான்
உணர்ந்து விட்டால்
தன் காலடியில்
நல்ல காலம் உதயமாகும்.
கிழிக்கப்பட்ட
பல பிரிவுக்கோடுகளுக்கு
இணைப்புக் கடிதம் மூலம்
ஒரு சமாஜத்தை உருவாக்கும்
தீவிர திறமை
சாந்தமான போக்கில் தான்
நாம்
கண்டு கொள்ளலாம்.
மேலே
அனாதியற்று பறந்த திரியும்
உய்ரான அமைதி மடலுக்கு
நல்ல பதில் எழுதி
எமது விருந்தோம்பலுக்கு
தரையில் அழைத்துவர
அன்பினால் தூது விடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடை தேடும் வினாக்கள்



இந்தச் சமுதாயத்தில்
எங்களின் கண்களை
இறுக்கமாய்க்
கட்டி விட்டார்கள்.
←○❖○→

எந்தப் பக்கம்
கால் அடியை
எடுத்து வைத்தாலும்
அந்தப்பக்கம்
எங்களுக்காகப்
படுகுழி தோண்டி
வைக்கப்பட்டு இருக்கும்
←○❖○→

நவயுகத்தின்
இளைஞர்கள் என்பதற்காகவா
ஆகாய மேகங்கள்
கறுப்புக்குடை
பிடித்துக்கொண்டு
எங்களைச் சித்திரவதை
செய்ய வேண்டும்.
←○❖○→

நாங்கள்
இம்மண்ணில்
இருக்கும் மட்டும்
இந்நாடே (இம் மண்ணே)
எங்களுக்கு எதிரியானால்
எங்களின்
எதிர்காலக் கனவுதான்
என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதி

காரியத்தைக் கண்டு
காரணத்தை நிச்சயிக்க முடியாத
கௌட நெறியின்
சௌஜன்னியச் சம்மேளனம்
படுகொலை
செய்யப்பட்டுள்ளது.

○❁○

மலரும் பூ
பிரசவ வேதனையில்
படும் துயரத்தைக்
கருத்தடை மூலம்
தொற்று நீக்கும் முயற்சி
பழந்துருத்திகளால்
கைவிடப்படுகிறது.

○❁○

பல மாதிரியாகப்
பல வந்தங்கள் கூடி
பல்லாங்குழி விளையாடி
மீட்புக் காவலில் வைக்கும்
சர்வதிகாரச் சஞ்சாரமே
மாயை வித்தை காட்டும்
இன்றைய
வழித் தோன்றல்கள்.

○❁○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைப்
பூஜை செய்யும்
பூச்சாண்டிகள்தான்
பூமரத் தொட்டிலில்
கர்வமுள்ளாகப்படரும்
அதிகாரிகள்.

○❁○

மருதஞ்சோலைக்குள்
நாசகார மழைத்துளிகளால்
பிடுங்கி எறியும்
களையினம்
முளைத் தோங்குவதைக்
களை கொல்லிகளால்
அழித்திடுவதற்குப்
புதுப்புது
நஞ்சு மருந்து வகைகள்
கண்டு பிடிக்கப்படுகின்றன.

○❁○

நாம்
சும்மாயிருந்து
விஞ்ஞான விடியலை
ஒரு போதும்
காண மாட்டடோம்.

○❁○

சந்தர்ப்பம்
வரும் சமயம்
மனக் கனவு
நிறை வேற்றுவதற்கு
தன் இதயத்திலுள்ள
ஓட்டை ஒடசல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைத்த பின்னே
அநியாயத்தைக்
கால முழுதும்
உணர்ந்து பாருங்கள்

○❁○

உண்மையின் இலட்சியம்
உயிரற்ற போதும்
உருவம் கொடுக்கும்
புனிதத் தன்மைச்
சிலையொன்றை கட்டுவதற்கு
அடிக்கல்லை
உறுதியாக நாட்டுங்கள்.

○☯❁☯○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசற்கதவு



யன்னலின்
திறப்பு விழா
இது இதயத்தின்
வசந்த விழா.


இயற்கையின்
அபூர்வக் காதல்
தேன் வண்டுகளின்
பலவீனங்களுடன்
புஷ்பமாக மலரும்.

அழகு மிகும்
கண்ணாடிகளினால்
அலங்கரிக்கப்பட்ட
அபிநயம் வாய்ந்த
கயல்விழி என்றும்
விழித்துக் கொண்டே
இருக்கும்.

நேரடிப் பார்வைக்கு
திரைச் சீலைகளுக்குத்
தனியிடமே இல்லாத
தணியாத தாகம்
தனிப் பிறவியேதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பார்

இரவில் பரவும்
வதந்தி
கிட்டவுள்ள
அகதி முகாமில்
நித்திரை முழிக்கும்.

●✪●

பரிமாறிக் கொள்ளும்
பகுத்தறிவான
சுடுசோறு
ஆறாமல் திண்பதினால்
பல அவஸ்தைகள்
பரிணமிக்கின்றன.

●✪●

நிஜமாக
அவலங்களின் நிலைமைக்குள்
விஷக் கிருமிகள்
கூடு கட்டத்தான்
செய்யும்.

●✪●

மூட்டைப் பூச்சியின்
உடன்பிறப்போடு ஒத்தசுரண்டல்கள்
உற்ற தோழனுடன்
கைக்குலுக்கிக் கொள்ளும்
புனருத்தாரணம்தான் அது.

●✪●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்ட புல்லுருவிகள்
தனிமைப்புக்குப் புல்லாங்குழல்
வாசித்தால்
அதன் ஆலாபனம்
எளிதில் தெளியாத
இசை நீரோடைதான்.

●✪●

கிளறிவிடும்
விளம்பரச் சக்திகள்
நேர்மைத்
துலாவைக் கொண்டு
சிந்திக்கக் காத்திருக்கும்
காலமல்ல.
கால நேரத்துடன்
நன்மை தீமைகளைத்
துருவிப்பார்க்கும் தழுவல்.

●✪●

தண்டிக்கப்படக்கூடிய
குற்றங்கள்
சக்கி முக்கி கற்கள் தான்
எடுத்ததைத்
துருவித்தான் பார்.

☺●✪●☺



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாக்கிரதை



தூண்டிற் புழுவை
இரைக்காக மட்டும்
சாகடிப்பது
அராஜகம் எழுதிய
தலை விதி.

●✪●

ஒருவருக்கொருவர்
சுட்டுச்சாப்பிடும்
கொடூர குரோதத்திற்குக்
குங்குமம் இடத்தான்
தூண்டிற் போடுகிறார்கள்.

●✪●

மிருகவெறி
என்ற
உவமானத்தை
இக்கலியுகம்
மனிதவெறி என்று
ஒப்பீட்டு ரீதியில்
மாற்றிக் கொள்வது
காலச் சிறப்பு.

●✪●

முகமுடிகளைக்
கிழித்தெறிவதற்கு
முரட்டுயுக்திகள்
திடீரெனக்
கொதிக்கும் எண்ணெயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீக்குளித்தால்
நியாயம் பிறக்காது.

●✪●

நினைத்தபடி
வாழ்வதற்கு
தலைக்கு
விரிக்கும் குடை
ஓட்டை ஓட சலின்றிச்
சீராக இயங்கக் கூடிய
கட்டமைப்பு
சர்வதேச அமைப்பில்
பொங்கும் பூம்புனலாகச்
சீரிய திட்டம்
தீட்டிடு

●✪●

நாளைய பொழுதை
இன்றைய பொழுதென்று
சங்கை செய்தால்
பொன்மாலைப் பொழுது
உதயத்தின் வரவாகும்.

●✪●

நடந்ததை மறந்து
தூறல்
நின்று போன
கதை படித்தால்
துயரங்கள்
தொடர்கதையாகும்.

●✪●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ
பட்ட கடன்
குறை தீர்க்காமல்
பெருமைக்
குஸ்தியடித்தால்
நிச்சயம்
குட்டுப்பட வரும்
சுய நினைவுக்கு
ஜாக்கிரதை இடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைது



ஜுராகச் சிலுசிலுக்கும்
அவஸ்தைகளாலேதான்
அவமான அனாவசியங்கள்
அசௌகரிய ஆர்ப்பாட்டத்தைச்
சுவாதீனமாகத் தீப்பாய
விறகுகள் எரிக்கப்பட்டன.
சமாதானப் புறா
தூங்கும் போதே
நெடுநாள் விழித்திருந்த
உறங்காத உணர்வலைகள்
மானுட சமுதாயத்தைக்
காயப்படுத்தி விட்டன.
தீய உணர்வலைகள்
மனித உயிரை
வயிற்று பசிக்காக
வெட்டிச் சாப்பிடும் உணவு
கழிவுப் பொருட்களாக
இரத்தச் சலம்
வெளியேறுமானால்
குன்று தீவுகளை
அழித்துப்போடுவதற்கு
எமது
புத்திரதேசம் காட்டும் காட்சி
அழிவுத் திரைப்படம்.
எங்களுக்குச்
சிறகுத்துடுப்புக்கள் இருந்தால்
வானில் மேலாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறந்து சென்று
நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.
மண் நிலத்தோடு
விதைக்கப்பட்ட
விதை பொருள் நாங்கள்.

மனிதன்
என்ற தத்துவத்திற்கு
வரைவிலக்கண மில்லாத
ஆயுதங்களின் சிறைக் கைதிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவை எதற்காக நடக்கின்றன?

பிணம் தின்னும்
மனிதக் கழுகுகளின்
கர்ஜனைதான்
புதிய
ஆயுதப் பரிகரண
மகாநாடு

●✡●

இதனோடு
தொடர்பு கொண்டவர்கள்
முதல் ஸ்பரிசமாக
அழித்தல் முறையை
விஸ்தீரணமாகக் கொண்டு
பிரச்சாரக் கண்ணி வெடிகளை
அழுக்குப் புதை குழியில்
இலக்குப் பார்த்துப்
புதைப்பார்கள்.

●✡●

தூண்டில் போடும் போது
ஆமை மட்டும் படுமா
அல்லது
மீன்களும் படுமா என்பதை
யோசிக்கத் தெரியாதா
காடையர்கள் தான்
இதைப் புரிகின்றனர்.

●✡●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர்ப்புகையை
அன்றைய மாணவர்கள்
கண்டிருக்கவே முடியாது.

●✡●

இதை
இன்றைய மாணவர்கள்
பார்த்துப் பார்த்து
கண்ணே
சலித்துப் போயிட்டு தென்று
சாக்குப் போக்கில்
தூங்கிக் கொண்டுதான்
இருக்கிறார்கள்
சில துரதிர்ஷ்டங்களுக்கு
எங்களை
அவதூறு படுத்துகிறார்கள்
ஒரு நாளும்
உருப்படவே மாட்டார்கள்.

●✡●

கட்டாயக் கட்டுப்பாட்டுக்குள்
கட்டிப் போடுகின்றவர்கள்
நாங்கள் இல்லை என்று
ஒரு கேள்விக்கு விடையளித்த
மாணவ புலம்பலின்
நியாயம் தான் இது
இவர்களைப்
படுகொலை செய்யச்
சில அதிகாரங்களுக்கு
எப்படி மனசு வரும்?
இப்போ அவர்களின்
மரண ஊர்வலம் தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து கொண்டிருக்கின்றது.
இந்த நடைமுறைக்குக்
குற்றவாளி யார்?
வழிகாட்டிகளா?
வழிகட்டிகளா?

●✡●

தூண்டற் பேராக உள்ள
காஞ்ச சருகுகளை
தேடிக் கண்டு பிடித்து
பற்றவைக்காமல்
துளிர் விடும் பச்சை இலைகளைத்
தீயிட்டுக் கொழுத்தியவர்களுக்கு எதிராக
நடவடிக்கை
எடுக்கத்தான் வேண்டும்

●✡●

இவையெல்லாம்
எதற்காக நடக்கின்றன
என்பதை
தீர ஆராயத்தான் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்க்கதரிசனம்

மொட்டைக்
கடிதத்தாள்களை
குப்பைத்தொட்டி
அடைக்கலம் கொடுத்து
அடுக்கி வைக்கும்

பளிச்சிடும் அனுமானங்களில்
செய்ய முடியாத
புணருத்தாரணம்
திட்டமிட்ட பின்புதான்
சீர்குலைகின்றன.
தர்ம நியாயங்ளைச்
சுட்டிக் காட்டிக்
கட்டிக் காக்கின்றவர்கள்
தட்டிக் கேட்பார்களா?

பயந்த சுபாவம்
எப்படிச் சீரழிகின்றது
புதுமையாகச் சொல்லித்தான்
தெரிந்து கொள்ள
வேண்டியதில்லை.

சட்ட நியதிகள்
குறுக்கு வழிகளில்
குரங்காட்டியின் நிறுவனத்தில்
உற்பத்தியாகும் போது
கூர்ந்து கவனிக்க
என்ன உண்டு.

சுயநலமிக்க
சுயநலமிக்க ஆசாமிகள்
ஜாம்பவமிக்க பூசாரிகள்
ஜாதகத்தை சொல்லிச் சொல்லி
ஜாஸ்தியற்ற விஷயத்தில்
ஆஜராகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத் தியாகம்

உஷ்ணத்தில்
உச்சாணி வரை
உயிருடன்
போராடும் குளிர் காலத்தின்
மன நிம்மதி
மரணித்து விட்டது.

கோடைகாலச் சூரியன்
கொழுந்து விட்டு எரியும்
தீப்பிளம்பில் தான்
அஸ்தமிக்கின்றது.

புயல் காற்றில்
மின்சாரம் பாயும்
தந்திக் கம்பிகள்
தந்திரத்தில்
மந்திரம் சொல்லி
முடிக்கின்றன.

யார் யாரோ
யாகம் கேட்டும்
யாப்புத் திருத்தும்
அதிகாரப் பூட்டுக்குள்
பரிகாரம்
தேடவில்லை.

நந்தா விளக்கென்னும்
குத்து விளக்கில்
தேங்காய் எண்ணெய்
தேடுவதற்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையாமே
அப்புறம் எதற்கு
அந்தப் பச்சோந்தியாகத்திற்கு
விழா எடுப்பு.

போங்கடா போங்க .....
போடியாரின் சால்வையிலும்
ரத்தக் கறை
படத்தான் போவுது
மித்திரனிலும்
மின்சாரம்
பாயத்தான் போவுது
போங்கடா போங்க....

தீர்க்கதரிசனம் கூறும்
ஞானிகள்
இங்கு யாருமில்லை.
புண்ணிய சீலனுக்கு
கண்ணியம் செய்ய
சரித்திரம்
இங்கு ஏதுமில்லை
போங்கடா போங்க....

பூபாளத்தில்
ஒரு
நெருப்புச் சூரியனை
அநீதிக்கு எதிராக
படைத்து விட்டுத்தான்
மரணிக்கப் போகிறான்
முன் போகின்றவர்கள்
போங்கடா போங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதனைக் காவியம்

முக்கணாங் கயிறு
வண்டி மாட்டின்
மூக்கை இறுக்க
இரத்தம்
கசிந்தோர்டிடும்

❖

கேட்டிக் கம்பால்
வாங்கும் அடி
முதுகில்
பட்டை கிளப்பிடும்

❖

களைப்பால்
பொதி
சுமக்கமுடியாமல்
நிலத்தில்
குப்புறப் படுத்திடும்

❖

இன்னோரன்ன
துயரங்களின்மத்தியில்
வண்டிக்காரன்
பிழைத்தலுக்கு
வழிகாட்ட
நினைத்திடும்
வேளாண்மை
வெட்டுக்குத்து
விதைப்புநாட்களில்
அதற்கு
களைப்பேது
உறக்கமேது

❖

வாடிக்கையாய்
நின்று
தொழில் புரியும்
பேடியாரிடம்
கொட்டில்
நனையாமலும்
பசியில்
வாடாமலும்
வாழ்வதற்கு
கூலிப்பணம் வருவதை
பெரு ஆவலோடு
எதிர்பார்த்திடும்

சுற்றினில்
பல எண்ணங்கள்
வேதனைக் காவியங்களாகவே
ஒழித்திடும்

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுங்கள்

விமோசனம் கிடைக்காத
தாமரைக் குள மொன்று
வற்றாத வண்ணம்
கிளை வாய்க்கால்-
வழியாகச் செல்லாது
அவிந்து
வெடுக்கு நாறத்தொடங்கின

வேலை நிறுத்தத்தில்
ஓங்கிய கை
ஆர்ப்பாட்டத்தைத்
தடு நிறுத்துபவர்களினால்
முறிந்து விட்டது

குடல் முழுக்க
பசிக் கொடுமை
நிர்மானுஷ்யமாக
அள்ளித் தின்னக்
கரங்கள் இல்லை.
என்ற பதற்ற நிலை

சேத விபரங்களைப்
பட்டியல் போட்டுக்
கண்டன நடவடிக்கை

புனரமைக்கப்பட்ட
விற்பனையாகும் நிர்வாகம்
தொழிலாளிக்கு இழைத்த
சுரண்டல் விரோத செயலை
மூடி முறியடிக்கும்

தூங்கிய தூரம்
தனக்கெனப்
பல்கலைக் கழகம் திறந்து
இருந்தால்
கரச் சேதம் நடக்காது
கல்வித் துப்பாக்கி
முட்டி
முறியடித்திருக்கும்

விடிந் தெழும்பி
வீதியோரம்
வீண் கனவு காணாமல்
நடவடிக்கைப் பாதையில்
நல் வழி செல்லப்
பாடசாலை நாடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கு



இறுக்கி முடியக் கூடிய
கம்பீரக் கயிறுகளைக்
கன்னம் வைத்துக் கூட
திரிக்க முடியவில்லை

தடை நேரிடும்
வீண் டம்பங்கள்
வாஸ்தவம் என்று
அழுத்தமாக
அழுத்திடுவோரின்
எண்ணிக்கையைத்தான்
அதிகப்படுத்தும்

சோம்பலுள்ள பதர்கள்
பரம ஜனங்களைக்
கழுகுப் பார்வையில்
முழு முடமாக்க
மிகுந்த அந்தஸ்துக்களை
தேடுகின்றன.

அவனுடைய
ஜய பேரிகைக்கு
உலகப் பரிசு கொடுப்பதாக
வாக்குச் சாவடிகள்
அமைக்கப்படுகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது எப்படி
பேடிகளுக்கு
உலகப் பரிசுகள்
கொடுக்க முடியும்"

கொடுக்க முடியும் என்று
ருஜூப்படுத்திய பின்னர்
அதுதான்
என்றுமே வேள்விகளுக்கு
எங்குமே மதிப்பில்லை
என்பதை
முன் கூட்டியே
புரிய வேண்டும்
விஷயங்களை குறித்து
விளைவுகளைக்
கணக்குப் போடும்
ஆள்வோருடைய
சம்பிரதாயம்
ஜகத்தினை
பழிக்கத் தெரியும் ஒழிய
பெரும் பொருட்டாகக்
கணக்கெடுப்பதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சிடாதே



மக்களைக்
கொன்றொழிக்கத்தான்
இந்து சமுத்திரம்
பொங்கிப்
பெருக்கெடுக்குதோ !
ம். . . ம் . . . ம்

எதிர்பாரா விதமாக
பயங்கர முதலை வாயினுள்
அம்மான அகப்பட்ட
கையொன்று
அதன் கழுத்தின் கீழ்
அக்குளுக்குத்தி
பூட்டை
உடைக்க முடியாமல்
தத்தளிக்கின்றது.

ஜோராய்ச்
சிலை செதுக்கிய
சிற்பன்
மூலப்பொருள்
எவ்விதமாய்
ஆக்கப்பட்டது என்னும்
கருப்பொருளை
அறியாத
முட்டாளாகத்தான் இருப்பான்.

ஏனுங்க . . .
ஏட்டுக்கு உதவாத
எட்டப்பர்களின்
முகாரிகளை
இன்னும்
கேட்கவா
வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்கரம்
அத்துனுள்
அகப்பட்ட பின்
அட்டூழியங்களை
உட்சென்று
வேதனைப்படும்
கைகளுக்குத்தான் தெரியும்

ஏன் நீங்கள் - இன்னும்
பராமுகமாக
இருக்கின்றீர்கள் ?

மொட்டை
மாடியில் நின்று
மட்டம் தட்ட
பேசி முடித்தவர்கள்
சரித்திரப்புகழ் பாடும்
சரசுவதியந்தாதியாகவா
வாய் பேசாத
மௌனியானீர்கள்

எம்மைக்
கல்விக் கொண்டு
ஆற்றுக்கிடங்குள்
வாரி இழுத்தாலும்
திமிரி
வாளால் அடித்தாலும்
ஐடியாக்களைப்
புதுப்பித்தவாறு
எதற்கும் அஞ்சிடாது
அதன்
கீழ் நாடிக்குள்
ஆக்குளுக்குத்தி
பிடியிலிருந்து
விடுபடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்ப் பிரசங்கம்



சந்தனம் பூசிய
முகவதனத்தை
வியர்வைத் துளிகள்
கிழித்தெறிய
வந்துள்ளன

அறைக்கதவைச்
சாத்திவிட்டு
கைகளில்
நெருப்புக் கொள்ளி
வைத்திருக்கிறாள் கண்ணகி

அதிகாரியாகும்
இனப் பாகுபாடுகள்
ஏ.எஸ்.பி.பதவிக்கு
விண்ணப்பித்துள்ளன.

நிலையை
யோசிக்கையில்
அவமானமாகத்தான்
உள்ளது.

கட்டாயச்
சட்டத்தில்
ராணுவம்
சிவப்பு உடைகள்
அணிந்தால்
மிகச் சிறப்பாக இருக்கும்

ஒரு மாதிரி
சங்க மாநாட்டை
திருப்திகரமாய்
நடத்தவும் முடியும்.

யாவரும்
ஒருமைப்பாட்டை
விரும்பக் கூடிய வகையில்
மேடை பேச்சாளர்களுக்கு
தலைப்பை
விதியாக
எழுதிக் கொடுங்கள்

உறவுக்கு
அர்த்தம் விசாரிக்கும்
பிரயோஜன அலைகள்
சபையோருக்கு மத்தியில்
ஆயுதச் சொல்லில்
போர்ப் பிரசங்கமாய்
அமையட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ?

ரயில் பயணங்களில்
தண்டவாளம்
பிரண்டுள்ளது.

☺❁☺

கைது செய்யப்பட்ட
மனுத்தாக்கல்
அனுமதியின்றி
தூக்கில்
தொங்கவிடப்படுகின்றது.

☺❁☺

நீதிக்கெங்கும்
கண்ணாம்பூச்சி
விளையாட்டுத்தான்.

✡☺❁☺✡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர் பார்ப்பு

பிரசவ வேதனையில்
மருத்துவ மனையை நோக்கி
காரொன்று
விரைவாக
விரைகின்றது

❖○❖

அந்த நோயின்
அவஸ்தைகேற்ப
அந்தக் காரும்
அவஸ்தைப்பட்டுதான்
விரைகின்றது.

❖○❖

இனவெறியர்களின்
இடை வழிமறிப்பில்
கார்
முற்றாக எரிக்கப்பட
சென்றவர்களும்
படுகாயமுற்றார்கள்

❖○❖

இதற்கு
முக்கிய
உடந்தையாரென்று
மனையகம்
சொல்லத் தயங்குகின்றது

❖○❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை
எந்தக்
சகாயத்திற்காக
செய்யப்படுகின்றது என்பதின்
அடிப்படைக் காரணம்
வெளிப்படையில்லை

❖○❖

நிலைமைக் கட்டுக்குள்
இளிச்சவாயர்களாக
தளிர்த்துப் போன
வகையில் - அமைதி
கஷ்டமாகத்தான் இருக்கும்.

❖○❖

சைனைட் கத்தியை
நெருப்பில்
காய்ச்சிய பிற்பாடு
இன வெறியர்களை
கண்ட துண்டமாக
கீறிக் கிழித்தெரியும்
முறையை நாம்
வகுக்க வேண்டும்

❖○❖

கூழ் முட்டையைக் குடிப்பதனால்
குடிப்பதனால்த்தான்
குறிப்பாக
குருடர்கள் அதிகம்

❖○❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிட்டுக் கும்பிட்டு
பொறுமையை
அடக்கி வைத்தால்
தினந்தோறும்
நம் உடம்பையே
அடக்கம்
செய்ய வேண்டி வரும்

❖○❖

நாம் வகுக்கும்
தீவிரவாத முறையில்
சொல்ல தயங்குவதைக்
சொல்லியும்
செய்து காட்டக் கூடியதை
காட்டியும்
பார்க்க வேண்டும்.

❖○❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வரலாறு உருவாகிறது

கண்ணாம் பூச்சி
விளையாட்டரங்கில்
முன்மொழிந்து
இயற்றப்படும் கானங்கள்
பிறரின்
மனக்குடியரசுக் கெதிராக
தொனிக்கின்றன.

வன்முறைக்
கும்பல்களுக்கு
முகமலரும் பங்களாக்கள்
இறைனமக்
கோட்பாட்டினை வைத்து
கைத்தாளம்
போடுகின்றனர்.

வளரும் கருத்துக்கள்
ஓர் இலாகாவில்
நுனிக் குடித்தனம்
நடத்தும் அளவிற்கு
இரத்த வங்கிகளை
நிர்வாக
மேலதிகாரிகளாய்
ஆக்கியுள்ளனர்.

சிவப்பாய்த்
தோற்றமளிக்கும்
ஒளிக்கீற்றுவழியில்
தானும்
சிவப்புத்தான் என்ற வகையில்
கடியன்களும்
ஏதோ ஒரு வேஷத்துடன்
ஊர்வலம் செல்கின்றன.

இந்தக்
உக்கிர கோட்பாட்டினை
நன்கு விளங்கியிருந்தும்
ஊமைப்புல்லாங்குழலாய்
நாம்வாழ
யார் வருவார்
உடைத்தெறிய?

நம்முடன்
முதலீடு
போட்டவர்களேதான்
இன்றிரவு நடுக்கடலில்
ஏராளமான மீனினங்களை
சாகடிக்க
கடற்கண்ணிவெடிகள்
சரிக்கட்டுகிறார்கள்.

அப்படியானால்
நன்குபடித்தவன்தான்
இன்று முட்டாளான
பட்டங்களை
தனக்கென சூட்டியுள்ளான்
என்பதினை
உண்மை வாசகம்
நிரூபிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்தட்டிக்
கூறும் நெஞ்சங்களை
சல்லடையில் போட்டு
அரித்தும் கூட
தரம் பிரிக்க முடியாத
ஒருமைக் கப்பிகளைத்தான்
காட்டுகிறது.

உடலெல்லாம்
ஓடும் ரத்தங்கள்
ஆயுத வெறியர்களின்
அயராத
உழைப்பின் நாளங்களிலேயே
நாம்
புரட்சியாளர் என்னும்
கோலத்தில்
அரக்கர்களாகத் தங்கி
காணப்படுபவர்கள்தான்
இவர்கள்.

இந்தக்
கிரீடத்தைச் சுமக்கின்றவர்கள்
தான் கொலையாளியல்ல

சாத்வீகம்
போராட்டத்திற்குத்தான்
வீர தியாகப்
படுகொலைகளைச்
செய்கின்றோம்
என்று மார்தட்டி
வெளிக் கொண்டிருக்கும்
ஊனத்தவர்கள்தான் நாம்.

வீரவேஷம்
பொருந்திய நடையில்
பொறுமைகள்
இங்கு
ஒருமூச்சு
வாங்குவதற்குக் கூட
இல்லை.

தம்முடைய
அறிவின் போக்கின்படி
தற்போது இளமையிலேயே
தாயை இழந்த தனயனா?
என்ற
கேள்விக்கணைக்கு
பதில் அளிக்கமுடியாத
நிலையில்
பரிதவிக்கின்றோம்.

இந்த நபர்களுடன்.
புக்கபலமாக
பயங்கரப் பூலன்தேவிகளும்
உருவாகிக் கொண்டுதான்
இருக்கின்றனர்.

உயிரிழந்த உலகம்
மக்களை
ஒரேயடியாகச் சாகவிடாமல்
இரண்டும் கெட்ட நிலையில்
அவஸ்தைப்
படுத்துவதைத்தான்
மனம் தாங்க முடியாத கதியில்
அழுது புலம்புகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாத பாடுபட்டு
பலரின்
காலைப் பிடித்துக் கெஞ்சி
பற்றிக் கொண்ட
கொடிய நோய்
புதிய சகாப்தமொன்று
படைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடியா காரியம்



மனமேடையில்
நாடகப் போட்டி முடிவு
கலவரத்திற்கு
உவப்பானதாய்
தீர்ப்பு வழங்கப்படுகிறது.

நிரந்தரமான
இயற்கை நீதி
தனியொருவனின் கையில்
இரக்கமற்றதாக
வயப்பட்டதால்
கசக்கிப்பிழியும்
அவலத் தேங்காய்ப் பூவாய்
உள்ளது.

உயர்ந்த
பதவி வகிக்கும்
விதியின்
திருவிளையாடல்கள்
ராஜாதி ராஜனான
அட்டகாச மாளிகையில்
சிறு சுண்டெலி வேடனுடன்
பற்களை இளித்துக்காட்டி
கைநாட்டுக்
கொத்தடிமைகளாகின்றன.

தன்னிச்சைகளைச்
சங்கிலிகளால்
விலங்கு போடும்
தாராள சலுகைகள்
அதிகார மூர்த்திகளாய்த்
தமக்கென்று
வரையறுத்துக் கொண்டன.

இந்தப்
பிறவிக்குணங்களில் வந்த
ஊனம்தான்
இக்கெட்டான சங்கடத்தில்
அமர்க்களப்படுத்தும்
கறுப்புத்தாடி வளர்க்க
விரக்தி யோசனைகள்
முற்படுகின்றன.

மறுபுறத்தில்
துப்பாக்கியின் துணையால்
விசேஷத்திறமை
பிரமிப்பூட்டும் வகையில்
தண்டிக்கும் உரிமையைப்
பெற்றுக் கொள்ளும்.
தீராத நோயாளி
குடியிருக்கும் நாட்டில்
உலகை ஏமாற்றும்
வைத்தியர்கள்தான்
முண்டியடித்துக் கொண்டு
முன்னுக்கு நிற்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத்
துயர கிரணங்கள்
ஓரேயடியாகச்
சூறாவளியாகமாறி
ஒரு முடிவைத்
தொடாதா ?

கைவிடப்பட்ட
நாம்
யாரைத்தான்
நம்ப என்ற முடிவில்
நம்பினோரையே
அழுது திட்டுகின்றோம்

விதி
வெகு கோரமாகவே
நம் நாட்டில்
விளையாடுகின்றபடியால்
மதியைக்
காட்டுக்கு அனுப்ப
வேண்டும்
என்ற முடிவுதான்
உள்ளது.

நல்லமனுஷன்
வசித்திருந்தால்
நம் பிரச்சினை
என்றோ
தீர்ந்து இருக்கும்.

❖◆○❖◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறத்தில்
துப்பாக்கியின் துணையால்
விசேஷத்திறமை
பிரமிப்பூட்டும் வகையில்
தண்டிக்கும் உரிமையைப்
பெற்றுக் கொள்ளும்.
தீராத நோயாளி
குடியிருக்கும் நாட்டில்
உலகை ஏமாற்றும்
வைத்தியர்கள் தான்
முண்டியடித்துக் கொண்டு
முன்னுக்கு நிற்கின்றனர்.

இந்தத்
துயர கிரணங்கள்
ஓரேயடியாகச்
சூறாவளியாகமாறி
ஒரு முடிவைத்
தொடாதா ?

கைவிடப்பட்ட
நாம்
யாரைத்தான்
நம்ப என்ற முடிவில்
நம்பினோரையே
அழுது திட்டுகின்றோம்

விதி
வெகு கோரமாகவே
நம் நாட்டில்
விளையாடுகின்றபடியால்
மதியைக்
காட்டுக்கு அனுப்ப
வேண்டும்
என்ற முடிவுதான்
உள்ளது.

நல்லமனுஷன்
வசித்திருந்தால்
நம் பிரச்சினை
என்றோ
தீர்ந்து இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபாயப் பயணம்

சம்மதம் கேட்டு
கோரிக்கைகளை
நிறைவேற்ற
ஏங்கல்சாக
புறப்பட்ட கடிதம்
திரும்பி வருகிறது.

எழுத்துரிமையோடு
விடுதலைக்குப்
பூரண சுதந்திரம்
வழங்கப்படவில்லை

நேச அணி
தேசிய பிரிவுகளுக்கு
முழுநாள்
ஹர்த்தால் அனுஷ்டிக்க
அறிக்கை விடுகிறது.

படைத் துருப்புக்கள்
விசுவாசமுள்ளவர்களுக்காய்
ரோந்து நடவடிக்கையில்
ஈடுபட
வலுப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு பக்கம்
கூடத்திரும்பிப்பாரா வண்ணம்
கட்டுக்கடங்காத குதிரையில்
அமைதியின்மை
ஏறிச் செல்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி

ஊராரின்
வாய்ச் சொற்கள்
நிஜ வாழ்வை
பத்த வைத்து
ஒரு பயனும் விளைவதில்லை

நெருக்கத்தில்
பயணம் செல்லும்
தண்டவாளங்களை
சுமை தாங்கியாக இருக்கும்
சிலிப்பர்கட்டைகளுடன்
கைகுலுக்கிக் கொள்ளும்
மலையக வாசகன்
சந்தேகக்
கேள்வி கேட்பது
நியாயமில்லை.

ஆனாலும்
சந்தர்ப்ப சூழ்நிலை வந்தால்
நியாயங்களைக்
கேட்டுத்தான் ஆகவேண்டும்
பீறிடுகிற

ஆற்றுக்கரைகளில்
தண்ணீர்மீன்கள்
அடித்தொறுக்கப்பட்டு
செத்துக்கிடப்பது
காலத்தின் சதுரங்கம்.

இதுவும் ஒன்று
குழறித்தடுமாறும் குரலில்தான்
விசேஷ மரியாதை காட்டி
வாக்கு மூலத்துக்கு
அநாயாசமாகக்
குறுக்கு விசாரணை செய்யத்
திருகலோடு
கைகலக்கின்றன.

ரஸமான உண்மைகளின்
ஏப்பம்
ஊற்றுக்கண்களின்
துர்க்கைகள்
சவ்வாக வருவாக்கப்பட்டுக்
கண்ணை மறைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

சமூக முன்னேற்றத்திற்காகவும், மானுட எழுச்சிக்காகவும் சிந்திக்கவும் போராடவும் கற்றுக் கொண்ட போர்க் குணமிக்க கவிஞர்களுள் ஒருவர் தோழர் இக்பால் அலி.

இக்பால் அலியின் கவிதைகள் சமூக அநீதிகளை சாடுவதில் முன்னணியில் நிற்கின்றன. எமது நெஞ்சுக்கு நெருக்கமான சிந்தனாவாதியும், மாபெரும் தலைவர் 'மாக்ஸ்' போன்று இவர் சமூக அநீதிககளுக்கெதிராக கோபம் கொள்கின்றார். ஒரு கவிஞனுக்கு அடிப்படையிலே இருக்க வேண்டிய இந்த இனிமையான அம்சந்தான் இக்பால் அலியினை சமகால இளம் கவிஞர்களுள் முக்கியமான கவிஞராக்கியுள்ளது. ஒரு கவிஞன் செயற்கைத் தனமான ஏற்பாடுகளை எல்லாம் கடந்து பிரச்சினைகளை அடையாளம் காட்ட வேண்டும் என்பது எமது முற்போக்கு எழுத்தாளரில் நிலைப்பாடு. இதனை இக்பால் அலியின் கவிதைகள் ஏற்றுக் கொண்டேயுள்ளன. கிழக்கு மாகாணத்தில் பிறந்தாலும் கஷ்டப்படும் மலையக மக்களின் கண்ணீரினைக் கண்டு கொதித்தெழும் கவிஞரின் கோபம் இதனையே நிரூபிக்கின்றது.

இக்பால் அலியின் கவிதைகளின் திறன் இவரை தேசிய ரீதியில் பிரகாசிக்கச் செய்துள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் 29ஆவது மாநாட்டினையொட்டி நடத்திய கவிதைப் போட்டியிலும், மேலும் பல கவிதை, கட்டுரைப் போட்டிகளிலும் இவர் பரிசுகளைப் பெற்றுள்ளார். மக்கள் கலை, இலக்கிய ஒன்றியத்தின் செயலாளராகக் கடமையாற்றும் இக்பால் அலி, பேராசிரியர் கைலாசபதி ஆய்வமயத்தின் செயற்குழு உறுப்பினராகவும், தென்கிழக்கு ஆய்வமயத்தின் உபதலைவராகவும் கடமையாற்றுகின்றார். அத்துடன், பறகஹதெனிய டி.ரி.ஏ. கல்லூரியில் விடுதியாசிரியராகவும் அதே பகுதியில் சூடாமணி பத்திரிக்கையின் பத்திரிக்கையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

இக்பால் அலி ஒரு நல்ல கவிஞர்; சிறப்பான பத்திரிக்கையாளர். ஆற்றல் மிக்க இயக்க உறுப்பினர் என்பவற்றுக்கெல்லாம் அப்பால் மக்களை மதங்களுக்கப்பால் இனங்களுக்கப்பால் நேசிக்கத் தெரிந்துள்ள ஒரு நல்ல மனிதனாக நான் அடையாளம் காண்கின்றேன். இதுவே இவரது கவிதைகளிலும் பாதிப்புச் செலுத்துகின்றது.

நீதியான சமூக சமத்துவமான சமுதாயத்துக்காக இவர் தொடர்ந்து இயங்கினால் நல்லதொரு எதிர்காலம் இவருக்காகக் காத்துள்ளது.

ஆர்.எம். இம்தியாஸ், பி.ஏ (சிறப்பு),
அரசியல் விஞ்ஞான விரிவிரையாளர்,
தென்கிழக்குப் பல்கலைக் கழகம்,
அட்டாளைச் சேனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org